viber : 076 636 3378
பக்கங்கள் : பதினாறு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1500/= + 500/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 கார்த்திகை 16 வியாழக்கிழமை (02.12.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 348

## அராலியில் இரு வீடுகளில் எரிவாயு அடுப்பு வெடிப்பு

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட அராலி கிழக்கு ஜே/163 கிராம சேவகர் பிரிவில் உள்ள இரண்டு வீடுகளில் அண்மையில் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியுள்ளதாக பொலிஸில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 28ஆம் ▷15

## கிளிநொச்சி முழங்காவிலில் சிலிண்டர் வெடிப்பு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி முழங்காவில் பகுதியில் சமையல் எரிவாயு சிலிண்டர் வெடித்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

நேற்று பிற்பகல் 3 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது. உணவகம் ஒன்றில் உணவு தயாரிப்பதற்காக சிலிண் ▷15

## “எமது நிலத்தை பறிப்பதும் உயிரைப் பறிப்பதும் ஒன்றே”

### வடக்கு ஆளுநர் அலுவலகம் முன் காணி உரிமையாளர்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

காணி அளவீட்டு பணிகளுக்கு இடையூறு விளைவிக்கும் முகமாக நடந்து கொள்பவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க தயங்க மாட்டோம் என வடக்கு ஆளுநர் கூறியதாக வெளியான செய்தியை அடுத்து வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.

வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன்பாக நேற்றைய தினம் புதன்கிழமை காணி உரிமையாளர்கள் மற்றும் அரசியல் பிரதிநிதி ▷15

# பொருளாதாரத்தை மேம்படுத்த உதவுவோம்

### இந்திய நிதியமைச்சர் பசிலிடம் உறுதி

*(புதுடில்லி)*



**இலங்கையின் பொருளாதாரத்தை மேம்படுத்த இந்தியா மேலும் பொருளாதார உதவிகளை வழங்கும் என இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் அமைச்சர் பசில் ராஜபக்சவிடம் உறுதியளித்துள்ளார்.**

உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டு புதுடில்லி சென்றுள்ள நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச, இந்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனை நேற்று சந்தித்து கலந்துரையாடினார்.

இந்த சந்திப்பில் இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பு திட்டங்களை மேலும் மேம்படுத்துவது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்தியா தமது பொருளாதார திட்டங்களின் ஊடாக இலங்கைக்கு வழங்கி வரும் ஆதரவிற்கு நிதியமைச்சர் பசில் ராஜபக்ச இதன்போது நன்றி ▷15

### காணிப் பிரச்சினைக்கு

## தீர்வு காண விரும்பினேன்

### ஆளுநர் ஜீவன் தியாகராஜா



(யாழ்ப்பாணம்)

நீண்டகால காணிப் பிரச்சினைக்கு தீர்வு காணும்முகமாகவே காணிப் பிரச்சினை உள்ளோரை சந்திக்க விரும்பினேன் என வடக்கு மாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜா தெரிவித்தார்.

நேற்று ஊடகங்களுக்கு வழங்கிய விசேட செவ்வியின்போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

30 வருடங்களாக காணிப் பிரச்சினை ▷15

## “ஒமிக்ரோன் பிறழ்வு” நாட்டுக்குள் நுழையலாம்?

### சுகாதாரத்துறை எச்சரிக்கை

(கொழும்பு)

உலகை அச்சுறுத்தி வரும் “ஒமிக்ரோன்” ▷15

### கிளிநொச்சி கல்மடுநகரில்

## இளம் குடும்பஸ்தர் அடித்துப் படுகொலை

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்மடுநகர் பகுதியில் இளம் குடும்பஸ்தர் ஒருவர் ▷15

## தலைமன்னார் துறை கலவன் பாடசாலையில்

### 12 மாணவர்கள் உட்பட 15 பேருக்கு தொற்று

(மன்னார்)

தலைமன்னார் துறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலையில் கல்வி கற்கும் 12 மாணவர்கள் உட்பட 15 பேருக்கு நேற்றைய தினம் புதன்கிழமை மாலை கொரோனாத் தொற்று உறுதிசெய்யப் ▷15

## கொரோனா 26 பேர் பலி

(கொழும்பு)

இலங்கையில் பெண்கள் 15 பேர் உட்பட மேலும் 26 பேர் கொரோனாவுக்கு ▷15

## வலி. கிழக்கு பிரதேச சபை உறுப்பினர் சடலமாக மீட்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சியான தமிழ் ஈழ விடுதலை இயக்கத்தின் வலி. கிழக்குப் பிரதேச சபை உறுப்பினர் சுப்பிரமணியம் சிவபாலன் சாவகச்சேரி தனங்கிளப்பு பகுதியில்அமைந்துள்ள பண்ணை வீட்டிலிருந்து நேற்றுப் புதன்கிழமை சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புத்தூர் வடக்கு ▷15

## கொரோனா தொற்று வடமாகாணத்தில் அதிகரிப்பு

### சுகாதார திணைக்களத்தின் புள்ளிவிபரங்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்தில் ஒக்டோபர் மாதத்தை விட நவம்பர் மாதத்தில் கொரோனாத் தொற்று நோயினால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என வடக்கு மாகாண சுகாதாரத் திணைக்களத்தின் புள்ளிவிப ▷15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



தோற்றம்
26 - 09 - 1975

மறைவு
25 - 11 - 2021

# சுப்பிரமணியம் வரதலிங்கம்

மயிலிட்டியைப் பிறப்பிடமாகவும் சுதுமலை மற்றும் லண்டனை வதிவிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் வரதலிங்கம் கடந்த 25.11.2021 வியாழக்கிழமை லண்டனில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசரத்தினம் - இராசம்மா தம்பதிகளின் பாசமிகு மருமகனும் தயாளினியின் (சித்தா) அன்புக் கணவரும் தீபிகா, பானுஷன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் கனகரத்தினம் (ஓய்வுநிலை அதிபர் - யா/புங்குடுதீவு மகா வித்தியாலயம்), தனபாலசிங்கம் (குணம் ஸ்ரோர்ஸ்), கமலேஸ்வரி (தேவி), காலஞ்சென்ற சரோசினி, புஸ்பலதா (லதா), கனகாம்பிகை (பிரான்ஸ்), துரைரத்தினம் (அதிபர் - யா/சுதுமலை சிந்மய பாரதி வித்தியாலயம்), சுவேந்திரன் (அவுஸ்திரேலியா) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் தவநாயகி, ராஜேஸ்வரி, இராசேந்திரம், சிவானந்தன் (A.T. Travels), பாலேந்திரன், ரவீந்திரன், நிஷாந்தி, அனுஷா, பரிபூரணானந்தன், காலஞ்சென்ற பரிமள காந்தன், சிவானந்தன், செல்வானந்தன், ஜெயரூபி, சுந்தரலட்சுமி ஆகியோரின் மைத்துனரும் யோகரஞ்சினி, பால ரஞ்சினி, உமாமகேஸ்வரி, உதயகுமார், சந்திரகுமார் ஆகியோரின் உடன்பிறவாத சகோதரனும் சரண்ஜா, ஷம்யுத்தா, துவாரகா, வாரணன், சரண்ஜன், ஜனகன், சாம்பவன், தயாபரி, வராகன், டிவோஜன், வினோஜன், ரதீபன், சாரு ஜன், சாரங்கி ஆகியோரின் சித்தப்பாவும் சண்முகப்பிரியன், பவித்திரன், விருண் ஆகியோரின் பெரியப்பாவும் உஷாயினி, சுஜந்தன், கோகுலராஜ், அபிஷாலினி, துஷாலினி, அபிலாஷ், மனுதர்ஷன், லோசனன், மிதுனராஜ், பிருதிவி; வர்சன், பைரவி, லக்சாயினி, பானுஷா், உஷாநாத், ரதீவன், ரசிக்கா, பவீனா ஆகியோரின் மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் யாவும் 6.12.2021 அன்று திங்கட்கிழமை (லண்டன் நேரம்) பி.ப 1.30 - 3.30 மணிக்கு 2 st Ambrose Grove, Breck Rd, Anfield, Liverpool L4 2RL, United Kingdom மலர்ச்சாலையில் இடம்பெற்று தகனக் கிரியை 238 Priory Rd, Anfield, Liverpool L4 2SL, United Kingdomஇலும் இடம்பெறும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

https://ripbook.com/subramaniam-varathalingam-61a4f6a472359/notice/obituary-61a4f7030b2b5

மேற்குறிப்பிட்ட Link இன் ஊடாக இறுதிக் கிரியைகள் நேரடியாக ஒளிபரப்புச் செய்யப்படும்.

கன்னித்தோட்டம்
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.

தொடர்புகளுக்கு: மனைவி - 00447780365242
சகோதரர்கள் - 076 840 7690, 071 847 5334, 077 711 0027, 0061478723855, மைத்துனர் - 077 983 9429 (சிவா - A.T.Travels)

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மத்திய, மாகாண மருத்துவமனைகளுக்கு இடையே வளப் பங்கீட்டில் பாரிய பாகுபாடு



## வடக்கு மருத்துவமனைகளின் ஆளணி பற்றாக்குறையை உடன் நிவர்த்தி செய்க

(கொழும்பு)

**மாகாண சபையின் கீழ் இயங்கும் மருத்துவமனைகளை விட மத்திய அரசின் கீழ் இருக்கும் வைத்தியசாலைகளுக்கு அதிகமான நிதி ஒதுக்கப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்தார்.**

நேற்று முன்தினம் பாராளுமன்றில் சுகாதாரத் துறை மீதான வரவு-செலவுத்திட்ட விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய போதே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் போதனா வைத்தியசாலையிலும் ஏனைய வடக்கு மாகாண நிர்வாகத்தின் கீழுள்ள மருத்துவமனைகளிலும் உள்ள ஆளணிப் பற்றாக்குறைகள் உடனடியாக நிவர்த்தி செய்யப்படல் வேண்டுமெனவும் அவர் வலியுறுத்தினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்.போதனா மருத்துவமனையில் மகப்பேற்று விடுதிக்கென உரிய நிரந்தக் கட்டடம் இன்னமும் இல்லை என்பது மிகவும் கவலைக்குரிய மிக முக்கியமான விடயமாகும்.

எனவே புதிய மகப்பேற்று விடுதி அமைப்பது குறித்து சுகாதாரத்துறை அமைச்சர் காலதமாதமின்றி உடனடியாக கவனம் செலுத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அத்துடன் மேற்படி மருத்துவமனையில் இன்னமும் 134 தாதிய உத்தியோகத்தர்களுக்கான வெற்றிடம் உடனடியாக நிரப்பப்பட வேண்டிய நிலையில் இருக்கிறது.

அத்துடன் வடக்கு மாகாண சுகாதாரத் துறையில் கடந்த யுத்த காலத்தில் ஏறத்தாழ 900 சுகாதாரத் தொண்டர்கள் அளப்பெரும் பணியாற்றி இருந்தார்கள். ஆனால் அவர்கள் எவருக்கும் நிரந்தர நியமனம் வழங்கப்படாது வீட்டுக்கு அனுப்பப்பட்டுள்ளார்கள்.

இப்படியாக சுகாதாரத்துறை சிற்றூழியர்களுக்கான பற்றாக்குறை நிலவுகின்ற இந்த காலப் பகுதியில் ஒதுக்கி வைக்கப்பட்ட சுகாதார சேவை தொண்டர்களை இலகுவாக உள்ளீர்க்க முடியும். அவர்களுக்கான கல்வித் தகைமைகள் என எந்தவொரு தடைகளும் இல்லாத நிலையில் அவர்களை இலகுவாக உள்ளீர்க்க முடியும்.

இதனைவிட மாகாண சபையின் கீழ் இருக்கும் மருத்துவமனைகளை விட, மத்திய அரசின் கீழ் இருக்கும் மருத்துவமனைகளுக்கு பல மடங்கு அதிகமான நிதி மற்றும் பல ஒதுக்கீடு காணப்படுவதால், மருத்துவமனைகளும் ஏனைய உத்தியோகத்தர்களும் அந்த மருத்துவமனைகள் மத்திய அரசால் உள்ளீர்க்கப்படுவதை விரும்பக்கூடும். ஆனால், இப்படியாக மத்திய, மாகாண மருத்துவமனைகளுக்கு இடையிலான வளப் பங்கீட்டில் பாரிய பாகுபாட்டைக் காட்டுவது உண்மையில் ஒரு மிகப்பெரிய அநீதியாகும்.

நிதி மற்றும் வளப்பாகுபாட்டுக்கு மத்தியிலும் வடமாகாண மருத்துவமனைகள் மிகச் சிறப்பான பணியை ஆற்றி வருகின்றது. அவ்வாறு சிறப்பாக செயற்படுவதால் மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மாவட்ட மருத்துவமனைகளையும் தெல்லிப்பழை மருத்துவமனையையும் மத்திய அரசு தன் நேரடி நிர்வாகத்தின் கீழ் உள்ளீர்க்க முயல்கிறது.

மத்திய அரசின் கீழ் வருகின்ற யாழ். போதனா மருத்துவமனையில் கூட மிகுந்த ஆளணி மற்றும் வளப்பற்றாக்குறை நிலவுகின்றமையே யதார்த்தம் என்பதால், வெறுமனே மத்திய அரசின் கீழ் மருத்துவமனையை உள்ளீர்ப்பதனை விடவும் மாகாண சபை நிர்வாகத்தின் கீழ் வருகின்ற மருத்துவமனையாக இருந்தால் கூட அவற்றிற்கான ஒதுக்கீடுகளை போதுமான அளவில் செய்து உரிய அனுமதிகளை அளித்து மாகாண சபை நிர்வாகம், அந்த மருத்துவமனைகளை திறம்படக் கொண்டு நடத்த வழிவகை செய்வதே நீண்டகால வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும்.

எனவே மாகாண மருத்துவமனைகளுக்கான வளப்பங்கீட் டில் பாகுபாட்டை ஏற்படுத்துவதன் மூலம் அவர்களை மத்திய அரசை நோக்கி போவதற்கான நிர்ப்பந்தத்தை ஏற்படுத்துவதை விடுத்து, அவர்களுக்கான உரிய ஒதுக்கீடுகளை செய்து மாகாண சபை அந்த மருத்துவமனைகளை நிர் வகிக்க வசதி செய்து கொடுக்க வேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி)

# பாராளுமன்ற உறுப்பினராக லலித் வர்ணகுமார பதவிப் பிரமாணம்



(கொழும்பு)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் களுத்துறை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் மகிந்த சமரசிங்க இராஜினாமா செய்ததை தொடர்ந்து அந்த வெற்றிடமான பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கு நியமிக்கப்பட்ட லலித் வர்ணகுமார, பிரதி சபாநாயகர் முன்னிலையில் நேற்று புதன்கிழமை சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் கடந்த 2020 பொதுத் தேர்தலில் களுத்துறை மாவட்டத்தில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் போட்டியிட்டு 46,361 வாக்குகளைப் பெற்றிருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5)


# நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு புதிய தலைவர்

(கொழும்பு)

நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு புதிய தலைவராக முன்னாள் சிரேஷ்ட நிர்வாக அதிகாரியான நீல் த அல்விஸ் நியமிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார்.

இதேவேளை, விவசாய அமைச்சரின் ஆலோசகராக எம்.டி.ரஞ்சனி ஜயக்கொடி நியமிக்கப்பட்டுள்ளார். (நி)

# மாத்தறை தீ விபத்தில் 8 வயதுச் சிறுமி பலி



(மாத்தறை)

மாத்தறை, வெலிகம பகுதியில் அமைந்துள்ள வீடொன்றில் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்ற தீ விபத்தில் எட்டு வயது சிறுமி உயிரிழந்துள்ளார்.

வெலிகம, வெவேகெதர வத்த பகுதியில் அமைந்துள்ள வீட்டிலேயே இந்த அனர்த்தம் ஏற்பட்டுள்ளது.

தீ விபத்தில் வீட்டின் கூரை பலத்த சேதமடைந்துள்ள துடன், உயிரிழந்த சிறுமியின் பாட்டியும் சகோதரியும் வீட்டி லிருந்து தப்பித்து வெளியேறி னர்.

எரிவாயு கசிவு காரணமாக இந்த தீ விபத்து ஏற்படவில்லை என்பதை உறுதிப்படுத்திய பொலிஸார், தீ விபத்து தொடர்பான விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (நி-5)

# அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு நாட்டில் தட்டுப்பாடில்லை- ஜயசுமன

(கொழும்பு)

அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு இல்லை எனவும் அது தொடர்பான எதிர்க்கட்சியினரின் கூற்று தவறானது என்றும் இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

நாட்டில் 663 அத்தியாவசிய மருந்துகள் உள்ளதாகவும் அவற்றில் 15மருந்துகளுக்கான குறைபாடுகள் நிலவுகின்ற நிலையில் 8மருந்துகளுக்கு பதில் மாற்று மருந்துகள் வழங்கப்படுவதாகவும் தெரிவித்த அவர் அடுத்த வாரமளவில் மேலும் மருந்துகள் நாட்டுக்கு கிடைக்கவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் சுகாதார அமைச்சின் வரவு-செலவுத் திட்டம் மீதான குழு நிலை விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அடுத்த வருடத்தில் நாடளாவிய ரீதியில் 25 ஒசுசல கிளைகளை நிறுவுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. அதேவேளை, உள்நாட்டில் மருந்துகள் உற்பத்தி செய்யப்படுவதன் மூலமாக 5 பில்லியன் ரூபா நிதியை மீதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அரசாங்க வைத்தியசாலைகளில் பெருமளவு மருந்துகள் வீணாகின்றன. அவற்றை முகாமைப்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. அதன்மூலம் 15 பில்லியன் வரையிலான நிதியை மீதப்படுத்த முடியும் என அவர் தெரிவித்தார். (நி)



இஸ்லாமிய நாடுகளின் தூதுவர்கள் மற்றும் உயர் ஸ்தானிகர்களுக்கு இடையிலான சந்திப்பொன்று பிரதமர் மஹிந்த ராஜபக்ச தலைமையில் நேற்று முன்தினம் இரவு கொழும்பு ஷங்கிரில்லா ஹோட்டலில் நடைபெற்றது. ஓமான், பலஸ்தீன், குவைத், சவுதி அரேபியா, மலேசியா, கட்டார், துருக்கி, ஈரான், லிபியா, ஐக்கிய அரபு இராச்சியம், இந்தோனேசியா மற்றும் எகிப்து ஆகிய நாடுகளுக்கான இலங்கை தூதுவர்கள் மற்றும் மாலைதீவு; பங்களாதேஷ், பாகிஸ்தான் ஆகிய நாடுகளை பிரதிநிதித்துவப்படுத்தி அந்நாடுகளின் இலங்கை உயர் ஸ்தானிகர்கள் ஆகியோர் இச்சந்திப்பில் கலந்து கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனா + 744

நாட்டில் நேற்று மேலும் 744 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு இதனைத் தெரிவித்துள்ளது.

இதற்கமைய, நாட்டில் கொரோனா தொற்று உறுதிப் படுத்தப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 564,733 ஆக அதிகரித்துள்ளது. (ம)


## மருந்தியலாளர் (PHARMACIST) வேலை வாய்ப்பிற்கான கற்கைநெறி ஆரம்பம்

தற்போது மருந்தாளர் வேலை என்பது மிகவும் அனைவருக்கும் வேண்டப்பட்ட தொழிலாக அமைந்துள்ளது. எங்கிருந்தாலும் இக் கற்கைநெறியை கற்கலாம் என்பதற்கு அமைய EXTERNAL PHARMACIST பரீட்சைக்கு தயார்படுத்தும் ONLINE வகுப்புகள் மூலம் இணைந்து கொள்ளலாம்.

இப்பரீட்சை கொழும்பு மருத்துவ பீடத்தினால் வருடந்தோறும் நடாத்தப்படுகின்றது.

இவ்வாண்டுக்குரிய EXTERNAL PHARMACIST EXAM 11/12/2021 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

- GCE O/L ஆங்கில பாடத்தில் சாதாரண சித்தி
- GCE A/L இரசாயன பாடம் உட்பட விஞ்ஞானப் பிரிவில்

மூன்று பாடங்களில்
சாதாரண சித்திகளுடன்

வயதுக் கட்டுப்பாடு இன்றி விண்ணப்பிக்க முடியும். விண்ணப்பித்து இரண்டு வருட காலப்பகுதியின் பின்னர் பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்து மருந்தாளராக பதிவு செய்த பிற்பாடு மாத வருமானம் ரூபா 50,000/= இற்கு மேலதிகமாக பெற்றுக்கொள்ள முடியும்.

வெளிமாவட்ட பரீட்சார்த்திகளின் நன்மை கருதி சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாலை 6.30 மணி - இரவு 9.30 மணி வரை Online வகுப்புக்கள் மார்கழி மாதம் 04/12/2021 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது.

இக் கற்கைநெறியானது இல. 464, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள யாழ்ப்பாணக் கல்லூரியில் சனி, ஞாயிற்றுக்கிழமைகளில் (வெளிவாரி பட்டப்படிப்பு). காலை 9 மணி தொடக்கம் மாலை 3 மணி வரை நேரடி வகுப்புக்கள் மூலம் (Personal classes) 02/01/2022 ஆம் திகதியில் இருந்து ஆரம்பமாகவுள்ளது.


"CERTIFICATE IN PHARMACY" என்னும் ஆறு மாத கற்கைநெறி Online வகுப்புக்கள் மூலம் திங்கட்கிழமைகளில் இரவு நேரத்திலும், நேரடி வகுப்புக்கள் ( Personal classes ) யாழ்ப்பாண கல்லூரியில் பி.ப 1 மணி - 3 மணி வரை நடாத்தவுள்ளோம். இதற்கான குறைந்தபட்ட தகைமையாக GCE.O/L ஆங்கில பாடம் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

சிகிச்சை நிலையங்களில்/ மருந்தகங்களில் பணிபுரிபவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

உங்களது விபரங்களை **077 625 6292** எனும் இலக்கத்திற்கு Whatsapp ஊடாக பதிவுகளை மேற்கொள்ளலாம் அல்லது மேலதிக தகவல்களுக்கு **077 316 4251** இல் நேரு Sir உடன் தொடர்புகொண்டு அறிந்துகொள்ளலாம்.

(8862)


# ஐ.பி.எல் தொடர் 2022
## தக்கவைக்கப்பட்ட வீரர்கள் விபரம்




2022 ஆம் ஆண்டு ஐ.பி.எல். தொடரை முன்னிட்டு அணி வீரர்களுக்கான மாபெரும் ஏலம் அடுத்த வருடத்தின் ஆரம்பத்தில் நடைபெறவுள்ளது.

இதற்காக அணியொன்றில் அதிகபட்சமாக 4 வீரர்களை மட்டுமே தக்கவைத்துக் கொள்ள முடியும் என்ற நிலையில் இதற்கான கால எல்லை நேற்று முன்தினம் நிறைவடைந்தது.

அதிகபட்சம் 2 வெளிநாட்டு வீரர்கள் அல்லது 3 இந்திய வீரர்களை ஒவ்வொரு அணியும் தக்கவைத்துக் கொள்ளமுடியும்.

இந்நிலையில் எந்தெந்த அணிகளில் யார் யார் தக்கவைக்கப்பட்டுள்ளனர் என்பது தொடர்பான பட்டியல் வெளியாகியுள்ளது.

**சென்னை சுப்பர் கிங்ஸ்:** ரவீந்திர ஜடேஜா - ரூ. 16 கோடி, எம்எஸ் டோனி - ரூ. 12 கோடி, மொயீன் அலி - ரூ. 8 கோடி, ருதுராஜ் கெய்க்வாட் -ரூ. 6 கோடி.

**மும்பை இந்தியன்ஸ்:** ரோஹித் சர்மா -ரூ. 16 கோடி, ஜஸ்பிரீத் பும்ரா - ரூ. 12 கோடி, சூர்யகுமார் யாதவ் - ரூ. 8 கோடி, கைரன் பொலார்ட் - ரூ. 6 கோடி.

**ரோயல் செலேஞ்சர்ஸ் பெங்களூர்:** விராட் கோலி - ரூ. 15 கோடி, கிளென் மேக்ஸ்வெல் - ரூ. 11 கோடி, முகமது சிராஜ் - ரூ. 7 கோடி.

**டெல்லி கெப்பிடல்ஸ்:** ரிஷப் பண்ட் - ரூ. 16 கோடி, அக்ஷர் படேல் - ரூ. 9 கோடி, பிரித்வி ஷா - ரூ. 7.50 கோடி, அன்ரிச் நோர் க்கியா - ரூ. 6.50 கோடி.

**கொல்கத்தா நைட் ரைடர்ஸ்:** ஆண்ட்ரே ரஸல் - ரூ. 12 கோடி, வருண் சக்ரவர்த்தி - ரூ. 8 கோடி, வெங்கடேஷ் ஐயர் - ரூ. 8 கோடி, சுனில் நரைன் - ரூ. 6 கோடி.

**பஞ்சாப் கிங்ஸ்:** மயங்க் அகர்வால் - ரூ. 12 கோடி, அர்ஷ்தீப் சிங் - ரூ. 4 கோடி.

**சன்ரைசர்ஸ் ஹைதராபாத்:** கேன் வில்லிய ம்சன் - ரூ. 14 கோடி, அப் துல் சமத் - ரூ. 4 கோடி, உம்ரான் மாலிக் - ரூ. 4 கோடி.

**ராஜஸ்தான் ராயல்ஸ்:** சஞ்சு சாம்சன் - ரூ. 14 கோடி, ஜோஸ் பட்லர் - ரூ. 10 கோடி, யஷஸ்வி ஜெய்ஸ் வால் - ரூ. 4 கோடி (இந்திய மதிப்பில்) (4-6)

# மரண அறிவித்தல்

பிறப்பு
20
.
02
.
1928



இறப்பு
01
.
12
.
2021

## கதிரிப்பிள்ளை பொன்னையா
(இளைப்பாறிய நீர் விநியோக பகுதி இயந்திர இயக்குனர்)

பொலிகண்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கதிரிப்பிள்ளை பொன்னையா நேற்று (01.12.2021) புதன்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரிப்பிள்ளை - பார்வதி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் உதயகுமார், நந்தகுமார் (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் இன்பமலர், வாசுகி (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமனாரும் பிரதாபன் - ரூபிகா, சோபிதா - விஜயசங்கர், தர்சிகா (சுவிஸ்), சாருகா (சுவிஸ்), அட்ஷிகா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு பேரனும் சவிஷ்னாவின் பாசமிகு பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.12.2021) வியாழக்கிழமை காலை 9 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக ஊரணி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**பாலாவி தெரு, பொலிகண்டி,**
**வல்வெட்டித்துறை**

(C-3142)

**தகவல்**
**குடும்பத்தினர்**

# பங்களாதேஷிற்கு எதிரான டெஸ்ட் பாகிஸ்தான் அணி வெற்றி



பங்களாதேஷ் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில், பாகிஸ்தான் அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

சட்டொக்ராமில் இடம் பெற்ற இந்தப் போட்டியில் பங்களாதேஷ் அணி தமது முதல் இன்னிங்ஸில் 330 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

அதனை தொடர்ந்து தமது முதல் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 286 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

இதையடுத்து, தமது இர ண்டாம் இன்னிங்ஸை தொடர்ந்த பங்களாதேஷ் அணி, அனைத்து விக்கெட்களையும் இழந்து 157 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

தொடர்ந்து 202 என்ற வெற்றி இலக்கை நோக்கி இரண்டாம் இன்னிங்ஸில் துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி, 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.(4,6)

# துயர் பகிர்கின்றோம்




எமது பாடசாலை உப அதிபர் திரு.**திருச்செல்வம்** அவர்களின் பாசமிகு மாமனார் (துணைவியாரின் அன்புத் தந்தை)

## நல்லையா செல்வராசா

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய வேண்டுகின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்,**
**யா/கீரிமலை நகுலேஸ்வர ம.வி. காங்கேசன்துறை.**

(C-3144)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராசிபலன்

02.12.2021
கார்த்திகை 16, வியாழக்கிழமை
திரயோதசி முன்னிரவு 6.33 மணிவரை
சுவாதி பிற்பகல் 2.55 மணிவரை
சுபநேரம் 7.45-9.15 மணிவரை
இராகு காலம் 1.45-3.15 மணிவரை
சந்திராஷ்டமம்- ரேவதி, அச்சுவினி
பிரதோச விரதம், அமிர்தசித்தம்

வளவன்


மேஷம்

சென்ற இடங்களில் செல்வாக்கு மேலோங்கும் நாள், உடல் நலம் சீராகும், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும்.


ரிஷபம்

சந்தித்தவர்களால் சந்தோசம் கிடைக்கும் நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள், தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் தகவல்கள் வந்து சேரலாம்.


மிதுனம்

உள்ளன்போடு பழகியவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும், புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள்.


கடகம்

புதிய நபர்களின் அறிமுகம் கிடைக்கும், மனதில் புதிய கற்பனைகளை வளர்த்துக் கொள்வீர்கள், தொல்லை தந்தவர்களே உதவ முன்வரலாம்.


சிம்மம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், தொழில் சம்பந்தமாக முக்கிய முடிவுகள் எடுப்பீர்கள்.


கன்னி

திறமை மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், இனிய செய்திகள் இல்லம் வந்து சேரலாம், வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பணப் புழக்கம் அதிகரிக்கும்.


துலாம்

உடல் நலனில் அதிக அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும், கொள்கைப் பிடிப்பை கொஞ்சம் தளர்த்தும் நிலை ஏற்படலாம், பெரியோர் சந்திப்புண்டு.


விருச்சிகம்

தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், வருமானம் திருப்தி தரும், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், சுப விரயங்கள் மேலோங்கும்.


தனுசு

இலட்சியப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், தித்திக்கும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


மகரம்

நண்பர்களின் சந்திப்பால் மகிழ்ச்சி கூடும், எண்ணிய காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காண்பீர்கள், உற்சாகத்துடன் பணி புரிவீர்கள்.


கும்பம்

நேற்றைய பணியொன்று இன்றும் தொடரலாம், தொலைபேசி வழித் தகவல் மனக் குழப்பத்தை அகற்றும், புதிய முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.


மீனம்

குடும்பத்தில் சிறுசிறு கருத்து முரண்பாடுகள் தோன்றி மறையும், பிரயாண பயமுண்டு, ஆரோக்கியத்தில் அக்கறை காட்டும் சூழ்நிலை உருவாகும்.

உலக வாழ்க்கை ஒரு தொடர் அன்புக் கூட்டம்

# பயணத் தடைகளால் மட்டும்

## ஒமிக்ரோன் பரவலைக் கட்டுப்படுத்த முடியாது

## உலக சுகாதார அமைப்பு

**(ஜெனிவா)**

**பயணத்தடைகள் மூலம் ஒமிக்ரோன் கொரோனாத் தொற்று பரவலை தடுத்து நிறுத்திவிட முடியாது. அத்தகைய தடைகள் உலகளாவிய சுகாதார முயற்சிகளை மோசமாக பாதிக்கும் எனவும் உலக சுகாதார அமைப்பு தெரிவித்தது.**

ஒமிக்ரோன் தொற்று பரவலை அடுத்து பல நாடுகள் தங்கள் எல்லைகளை முற்றாக மூடியுள்ள நிலையில் உலக சுகாதார அமைப்பு இவ்வாறு தெரிவித்தது.

பயணத் தடைகள் மூலம் இயல்பு வாழ்க்கை பாதிப்பு மற்றும் வாழ்வாதாரத்தின் மீது பெரும்சுமையையே ஏற்படுத்தும்.

இதற்குப் பதிலாக 60 வயது அல்லது அதற்கு மேற்பட்டவர்கள், உடல்நிலை சரியில்லாதவர்கள் அல்லது கடுமையான கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்கள், தொற்று பாதிப்பில் உள்ளவர்கள், அல்லது இதய நோய், புற்றுநோய் மற்றும் நீரிழிவு நோய் போன்ற இணை நோயால் பாதிக்கப்பட்டவர்கள் பயணங்களை ஒத்தி வைக்க அறிவுறுத்தப்பட வேண்டும் எனவும் உலக சுகாதார அமைப்பு அறுவுறுத்தியுள்ளது. (நி)


மணிவிழா வாழ்த்தும்
சேவை நலன் பாராட்டும்

திருமதி. இராசராணி நடராசா
16.03.2016-03.12.2021



சீரான கல்வியால் தாம்
சிறப்புற்று மாணவர்க்கும்
நல் நேரான வழிகாட்டி
நியமாய் நின்றுழைத்த
கணித ஆசிரியை.
பேரான பேர்பெற்று
கல்விப் பெருந்தொண்டில்
ஓய்வுற்ற வேரான
எம்பள்ளியின் விருட்சம்
வீறாக என்றும் விளங்க
வாழ்த்துக்கள்

வாழ்த்துவோர்:
பாடசாலைச் சமூகம்.
யா/கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டிதா
வித்தியாசாலை.

(8859)

மணி விழா வாழ்த்தும்
சேவை நலன் பாராட்டும்

திருமதி. அருந்ததி குகானந்தா
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம் ஆசிரியர்



ஆசிரிய சேவை விபரம்
1) கிளி/திருவையாறு ம.வி
28.02.2002-31.12.2010
2) யா/பெரியபுலம் ம.வி
01.01.2011-02.12.2021

ஆசிரியப் பணியை
அர்ப்பணிப்புடன் நிறைவேற்றி
இன்று 02.12.2021
ஓய்வு பெறும் மணி விழா
நாயகியை வாழ்த்துவதில்
மகிழ்வடைகின்றோம்.

"தாம் இன்புறுவது உலகு இன்புறக்கண்டு
காமுறுவர் கற்றறிந்தார்"

Congratulations!

வாழ்த்துவோர்:
யா/பெரியபுலம் மகா வித்தியாலயம்,
ஆசிரிய நலன்புரிக் கழகம்.

(8858)


## எரிவாயு அடுப்புகள் தான் வெடிக்கின்றன-குட்டியாராச்சி

(கொழும்பு)

நாட்டில் இதுவரை எந்தவொரு எரிவாயு சிலிண்டர்களும் வெடிக்கவில்லையென பாராளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ குட்டியாராச்சி தெரிவித்தார்.

நேற்று புதன்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

எரிவாயு கலவையில் பிரச்சினை இல்லை. ஆனால் எரிவாயு அடுப்பில் தான் பிரச்சினை இருக்கிறது.

ஆகவே, எரிவாயு சிலிண்டர்களில் கவனம் செலுத்துவது போன்று எரிவாயு அடுப்புகளிலும் கவனம் செலுத்த வேண்டும் என அவர் குறிப்பிட்டார். (நி)

## கொத்மலையில் வெடித்துச் சிதறிய அடுப்பு

(நுவரெலியா)

மேல் கொத்மலை புதிய வீட்டுத் தொகுதியிலும் காஸ் அடுப்பு வெடித்த சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளது.

நேற்று முற்பகல் 10 மணியளவில் இடம்பெற்றுள்ளதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி)

## மட்டக்களப்பிலும் எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறியது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு- திராய்மடு சுவிஸ் கிராமம் பகுதியில் நேற்று புதன் கிழமை காலை, எரிவாயு அடுப்பு வெடித்துச் சிதறிய சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

திராய்மடு சுவிஸ் கிராமம் பகுதியிலுள்ள வீடொன்றில் நேற்று காலை, தேநீர் தயாரிப்பதற்காக எரிவாயு அடுப்பினை செயற்படுத்திய வேளையில் இந்த வெடிப்புச் சம்பவம் ஏற்பட்டுள்ளது. (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இயற்கையின் கட்டுக்குள் நவீனங்கள் இருந்தால் அனர்த்தங்கள் இடம்பெறாது

## மருத்துவர் சத்தியமூர்த்தி

(சாவகச்சேரி)

நவீனங்கள் அனைத்தும் இயற்கையின் கட்டுப்பாட்டுக்குள் இருந்தாலே இயற்கையின் சீற்றத்தில் இருந்து தப்பிக்கலாம் என யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் த.சத்தியமூர்த்தி தெரிவித்தார்.



நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை சாவகச்சேரி கலாசார மண்டபத்தில் இடம்பெற்ற "சைவ சமய வாழ்வியல் முறைமைகளில் இயற்கை மேலாண்மை" என்ற ஆய்வரங்க நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இதனைத் தெரிவித்தார். இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அளவுக்கதிகமாக இயற்கையை புறக்கணித்தால் அது பெரும் சீற்றங்களை ஏற்படுத்தும். இன்று வீதிகளை, வீடுகளை, மதில்களை அமைக்கும் போது நீர் வழிந்தோட வழிவிடுவதில்லை. நாம் இன்று இயற்கையை மதிப்பதில்லை. அதனால் தான் வெள்ள இடரை சந்திக்கிறோம். அதனால் டெங்கு பிரச்சினை, தெருவில் வெள்ளம் உள்ளிட்ட பல சவால்களுக்கு முகம் கொடுக்கிறோம்.

இன்று இயற்கையை அழித்து மாட மாளிகைகளை அமைத்து வருகிறோம். இயற்கையை அழிப்பதைத் தவிர்த்து அதனோடு சேர்ந்து வாழக்கற்றுக்கொள்ள வேண்டும். மரங்களைப் பாதுகாப்பது மிக அவசியம். ஆனால் இன்று நாம் வீட்டினைச் சூழ மரங்களை வெட்டி விட்டு கொங்கிறீட் இடுகிறோம். இவ்வாறான செயற்பாடுகளை நாம் தவிர்க்க வேண்டும் என மேலும் தெரிவித்தார். (4-30)

# சாவகச்சேரி தம்புத் தோட்ட வீதியில் சட்டவிரோத மணல் அகழ்வு



(அராலி)

யாழ்.தென்மராட்சிஜே/301 கிராம உத்தியோகத்தர் பிரிவிற்கு உட்பட்ட தம்பு தோட்டம் ஊர் எல்லை வீதியில் சட்டவிரோதமாக மண் அகழ்வு இடம்பெறுகின்றது.

பிரதேச மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் வீதியில் இம் மண் அகழ்வு இடம்பெறுவதால் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். அத்துடன் இவ் வீதிக்கு அருகாமையில் உள்ள தோட்டக் காணிகளிலும் சட்டவிரோத முறையில் மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம்பெறுகிறது. மண் அகழ்வு தொடர்ச்சியாக இடம் பெறுவதனால் ஊர் மக்கள் இராணுவத்தினரின் உதவியை நாடியுள்ளனர். (4-30-104)

# பூஸ்டர் பெற தவறியவர்கள் சனி அன்று பெற்றுக்கொள்ளவும்

## சாவகச்சேரி சுகாதாரப் பிரிவு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்குட்பட்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் பூஸ்டர் தடுப்பூசி பெறத் தவறியிருப்பின் நாளை மறுதினம் சனிக்கிழமை சாவகச்சேரி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனைக்கு வருகை தந்து தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ள முடியும் என சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் அவர்கள் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த திங்கட்கிழமை தொடக்கம் தென்மராட்சி பிரதேசத்தில் முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்று மூன்று மாத காலத்தை பூர்த்தி செய்தவர்களுக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டு வருகிறது.

முதல் நாளில் 90 பேரும், இரண்டாவது நாளில் 108 பேரும் தென்மராட்சியில் பூஸ்டர் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர். முதல் இரண்டு தடுப்பூசிகளையும் பெற்ற 60 வயதை பூர்த்தி செய்த அனைவருக்கும் பூஸ்டர் வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருவதாக தெரிவித்தனர். (4-30)

# கடற்றொழில் உபகரணங்கள் திருட்டு

(பொற்பதி)

வடமராட்சி கிழக்கு கடற்கரையில் தொழிலின் நிமிர்த்தம் வைக்கப்படுகின்ற தொழில் உபகரணங்கள் அண்மைய நாட்களாக களவு போவதாக அந்தப் பகுதி கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தினர் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பாக மேலும் தெரிய வருவது, கடந்த 29 ஆம் திகதி தொழில் நிமிர்த்தம் வெற்றிலைக்கேணி கடற்கரை இறங்கு துறையில் நிறுத்தி வைக்கப்பட்ட இரண்டு தெப்பம் களவாடப்பட்டுள்ளதாக அந்த கிராம கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர் தெரிவித்தனர்.

தற்போது மாரிகாலம், அநேகமான கடற்றொழில் உபகரணங்கள் கடற்கரையிலேயே வைக்கப்பட்டிருக்கும், தொழிலாளர்கள் கடலுக்குச் செல்வதும் குறைவாகவே இருக்கும், இவற்றை சாதகமாகப் பயன்படுத்தி திருடர்கள் திருட்டு நடவடிக்கையில் ஈடுபடுவதாக தொழிலாளர்கள் மேலும் தெரிவித்தனர். (4-64)

# புங்குடுதீவில் 25 குடும்பங்கள் வெள்ளத்தால் பாதிப்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - புங்குடுதீவு, 25 வீட்டுத்திட்ட கிராமம் வெள்ளத்தில் மூழ்கியதால் மக்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். வேலணை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட புங்குடுதீவு 01 வட்டாரம், ஜே/28 கிராம உத்தியோகத்தர் பிரிவில் உள்ள 25 வீட்டுத்திட்ட கிராமத்தில் வசிக்கும் 25 குடும்பங்கள் தொடரும் மழை காரணமாக பாதிப்படைந்துள்ளனர்.

அத்தோடு வீடுகளுக்கு செல்லும் வீதியும் வெள்ளத்தில் மூழ்கியதால் மக்களுடைய போக்குவரத்தும் பாதிக்கப்பட்டுள்ளது. (4-33)

## ஆசிரியர் கலாசாலைகளுக்கான

# புதிய கல்வி ஆண்டிற்கு விண்ணப்பிக்க தவறியவர்களுக்கு மீண்டும் ஒரு வாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

ஆசிரிய கலாசாலைகளுக்கான புதிய கல்வியாண்டுக்கான அனுமதிக்கான நேர்முகப் பரீட்சைகள் நிறைவடைந்துள்ள போதிலும் கொவிட் நிலைமை காரணமாக விண்ணப்பிக்கத் தவறியோருக்கு நேரடியாக எதிர்வரும் 10 ஆம் திகதிக்கு முன்னர் நேர்முகப் பரீட்சையில் உரிய ஆவணங்களுடன் கலந்து கொள்வதற்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கடந்த காலங்களைப் போலல்லாது பட்டதாரிகள் அல்லாத - க.பொ.த.சாதாரணதரம் மற்றும் உயர்தரப் பரீட்சைகளில் போதிய தகைமை பெறாவிடினும் - நிரந்தர ஆசிரியருக்கான நியமனக் கடிதத்தைக் கொண்டிருந்தால் இந்த ஆண்டு ஆசிரிய பயிற்சிக்கு உள்வாங்குவதற்கான அனுமதியைக் கல்வி அமைச்சு வழங்கியுள்ளது.

இவ்வாண்டு வழங்கப்பட்டுள்ள குறைந்தபட்சத் தகைமையைப் பயன்படுத்தி இதுவரை பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்கான பயிற்சியை மேற்கொள்ளாதவர்கள் இருப்பின் உடன் அருகில் உள்ள கலாசாலை அதிபர்களோடு தொடர்பு கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி ரூபா | மருதனார்மடம் ரூபா | சாவகச்சேரி ரூபா | கிளிநொச்சி ரூபா |
|---|---|---|---|---|
| கத்தரிக்காய் | 380 | 450 | 300 | 400 |
| உருளைக்கிழங்கு | 170 | 190 | 170 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 450 | 350 | 400 |
| தக்காளி | 550 | 450 | 400 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 60 | 60 | 50 |
| கோவா | 280 | 350 | 300 | 400 |
| கரட் | 250 | 380 | 300 | 350 |
| பூசணி | 60 | 60 | 60 | 80 |
| புடோல் | 280 | 280 | 180 | 280 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 80 |
| சின்ன வெங்காயம் | 220 | 180 | 200 | 250 |
| பெரிய வெங்காயம் | 200 | 170 | 160 | 160 |
| பாகற்காய் | 600 | 550 | 400 | 600 |
| வெண்டிக்காய் | 240 | 240 | 180 | 280 |
| கருணைக் கிழங்கு | 120 | 120 | 130 | 160 |
| பயற்றங்காய் | 550 | 800 | 400 | 400 |
| லீக்ஸ் | 350 | 280 | 300 | 350 |
| பீற்றூட் | 140 | 140 | 140 | 200 |
| கறிமிளகாய் | 450 | 500 | 600 | 480 |
| முருங்கைக்காய் | 700 | 700 | 500 | 800 |
| போஞ்சி | 320 | 300 | 280 | 350 |
| கத்தரிதம்புள்ள | 350 | 320 | 300 | 320 |
| கீரை - 1 பிடி | 120 | 140 | -- | 100 |
| தேசிக்காய் | 350 | 350 | 400 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70 | 60-80 |
| இராசவள்ளி | 200 | 260 | 200 | 200 |
| வெங்காயப்பூ | -- | 450 | -- | -- |
| முள்ளங்கி | 150 | 180 | -- | 240 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 250 | 30 | 40 |
| ஈரப்பலா | 80 | 150 | -- | 150 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அண்மைக்காலமாக இறக்குமதியாகும் எரிபொருட்கள் தரம் குறைந்தவை

## பேருந்து உரிமையாளர் சங்கம் பரபரப்புத் தகவல்

(கொழும்பு)

**அண்மைக்காலமாக நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படும் பெற்றோல் மற்றும் டீசல் ஆகியன தரம் குறைந்தவை என தனியார் பேருந்து உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்தார்.**



ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இந்தக் குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.

தரம் குறைந்த எரிபொருட்களைப் பயன்படுத்துவதனால் தங்களது வாகனங்கள் பழுதடைவதாகவும் இது குறித்த தாம் பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்துள்ளதாகவும் தெரிவித்தார்.

கடந்த காலங்களில் பெற்றோல் மற்றும் டீசல் பயன்படுத்தி வாகனங்கள் செலுத்திய போது பயணம் செய்யக் கூடிய தூரமும், தற்பொழுது பயன்படுத்தப்படும் எரிபொருட்களின் மூலம் பயணம் செய்யக்கூடிய தூரத்திலும் வித்தியாசம் உண்டு எனக் குறிப்பிட்ட அவர்,

தற்பொழுது வாகனங்களுக்குப் பயன்படுத்தப்படும் எரிபொருள் சீக்கிரத்தில் தீர்ந்து விடுகின்றது. அதனால் குறைந்த தூரமே பயணம் செய்ய முடிகிறது எனவும் அவர் குற்றம் சுமத்தினார்.

இலங்கையில் எரிபொருளின் தரம் குறித்து பரிசோதனை நடத்துவதற்கு சுயாதீன நிறுவனமொன்று கிடையாது என அவர் சுட்டிக்காட்டினார்.

ஏற்கனவே சமையல் எரிவாயு தரம் குறைந்தது எனக் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டுள்ள நிலையில் எரிபொருட்களும் தரம் குறைந்தவை என பரபரப்பு குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# தமிழ் முற்போக்கு கூட்டணி பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக அங்கீகாரம்

(கொழும்பு)

தமிழ் முற்போக்கு கூட்டணி பதிவு செய்யப்பட்ட அரசியல் கட்சியாக தேர்தல் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மின்சூள் (டோர்ச் லைட்) கட்சியின் அதிகாரபூர்வ சின்னமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கடிதத்தைத் தேர்தல் ஆணைக்குழு ஆணையாளர் நிமல் புஞ்சிஹேவா, தமிழ் முற்போக்கு கூட்டணியின் செயலாளர் சந்திரா சாப்டருக்கு அனுப்பி வைத்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி)

## திருத்தம்

**பூநகரி பிரதேச சபை பொதுச்சந்தைகள், கருவாட்டுக் கடைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்வி அறிவித்தல்- 2022**

வலம்புரி பத்திரிகையில் 27.11.2022ம் திகதி பிரசுரிக்கப்பட்ட குறித்த விளம்பரத்தில் முதலாவதுபந்தியில்மீள் கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 10.12.2020 பி.ப 12.30 மணி என குறிப்பிடப்பட்டுள்ளது.இவ் விபரம் "மீள்கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி :10.12.2021 பி.ப12.30 மணி" என திருத்தியமைக்கப்பட்டுள்ளது என்பதுடன் குறித்த மீள் கேள்வி அறிவித்தலுடன் சேர்த்து வாசிக்குமாறு கேட்டுக்கொள்ளப் படுகின்றீர்கள்.

**அருணாசலம் ஐயம்பிள்ளை,**
**தவிசாளர்,**
**பிரதேசசபை,பூநகரி.**

(C-3140)

# எரிவாயு ஆலையில் வெடி விபத்து இருவர் படுகாயம்

(கொழும்பு)

புத்தளத்தில் எரிவாயு ஆலை ஒன்றில் வெடி விபத்து ஏற்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

புத்தளம் நைனாமடம் பகுதியிலுள்ள எரிவாயு ஆலை ஒன்றில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் ஏற்பட்ட வெடிவிபத்தில் இருவர் படுகாயமடைந்து நீர்கொழும்பு ஆதார மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக வென்னப்புவ பொலிஸார் தெரிவித்தனர்.

மோட்டார் வாகனங்களுக்காக பயன்படுத்தப்படும் குளிரூட்டிகளைப் புதுப்பிக்கும் இடத்தில் குளிரூட்டலுக்கு பயன்படுத்தப்படும் 5 அடி உயர நைதரசன் அடங்கிய சிலிண்டரில் பொருத்தப்பட்டிருந்த குழாயே வெடித்துள்ளதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது. (நி)

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 04 – 12 – 1934

மறைவு 23 – 11 – 2011



அமரர். பொன். கனகசபை (ஓய்வுபெற்ற ஆசிரியர்)

திதி: அபரபக்க திரியோதசி

அகம் தாங்கி அன்பு கொண்டு அரணாக காத்து நின்ற ஐயா!
நீங்கள் மறைந்து போய் ஆண்டுகள் பத்து ஆனாலும் எம்முன்
மூண்டதுயர் இன்னமும் கனல்கிறதே! என்றும் எம்
நிழலாய் நிற்க இறைகழல் துதிக்கின்றோம்.
ஓம் சாந்தி!

முருகன் கோவிலடி,
புலோலி.

(8861)

குடும்பத்தினர்

## க்ளைபோசெட் தடை நீடிப்பு

(கொழும்பு)

இரசாயன உரத் தடையை நீக்குவதற்கும், க்ளைபோசெட் தடையைத் தொடர்ந்து அமுல் படுத்துவதற்குமான வர்த்தமானி அறிவித்தல் அரச அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது என ஏற்றுமதி - இறக்குமதி கட்டுப்பாட்டாளர் தெரிவித்தார். (நி-5)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 1968.07.17

மறைவு 2016.11.27



அமரர். சுப்பையா தர்மகுலராஜா (தர்மா)

(திதி: 02.12.2021)

யாழ். ஆதியாமலை உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் சுவிற்சர்லாந்தை வசிப்பிடமாகவும் கொண்டிருந்த அமரர். சுப்பையா தர்மகுலராஜா (தர்மா)
ஆண்டாண்டு காலம் அழுது புரண்டாலும் மாண்டவர் மீண்டும் வருவதில்லை.
மண்ணில் புதையுண்டு போய் ஐந்தாண்டுகள் ஆனது- ஐயா எண்ணிய போது
காணலாம் என்றிருந்தோம். எட்டாத்தூரத்திற்கு எம்மை விட்டுச் சென்றாயே.
வட்டமுகமும் வண்ணச் சிரிப்பும் வாட்டுதையா. கள்ளமில்லா
உன் ஆத்மா சாந்தியடைய கடவுளை வேண்டி நிற்கின்றோம்

ஆதியாமலை,
உடுப்பிட்டி.

(8825)

தகவல்
சுப்பிரமணியம் இராஜேஸ்வரி
(சகோதரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீளுருவாக்கப்பட்ட ஆரியகுளம்

## தமிழ் மக்களுக்குப் பெருமை தரும் அரிய வரலாற்றுப் பணி



ப.புஸ்பரட்ணம்
வரலாற்றுத்துறை பேராசிரியர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

இலங்கை சுதந்திரமடைந்த காலத்திலிருந்து வெளிவந்த தமிழ் ஊடகங்கள் தூரநோக்குடன் தமிழ் மக்களின் வரலாற்றையும், பண்பாட்டையும் அடையாளப்படுத்தும் மரபுரிமைச் சின்னங்களைக் கண்டறிந்து அவற்றைப் பாதுகாக்க மக்கள் அனைவரும் முன்வர வேண்டும் என்ற வேண்டுதலை முன்னெடுத்து வந்திருந்திருப்பதைக் காண முடிகின்றது.

அவ்வேண்டுதலில் ஒன்றை நிறைவு செய்திருக்கும் அரிய வரலாற்றுப் பணியாகவே இன்று யாழ்ப்பாண மாநகர சபையால் முன்னெடுத்துள்ள ஆரியகுளம் மீள் புனரமைப்புப் பணியைப் பார்க்கின்றோம். இது யாழ்ப்பாண நகரை அழகுபடுத்தும் இயற்கை சார்ந்த மரபுரிமைச் சின்னம் என்பதற்கு அப்பால் அது யாழ்ப்பாண அரசு கால வரலாற்றையும், பண்பாட்டையும் நினைவுபடுத்திக் காட்டும் மரபுரிமைச் சின்னம் என அதற்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டிருப்பது அனைவருக்கும் மகிழ்ச்சி தருவதாக உள்ளது.

ஆரியகுளத்தை யாழ்ப்பாண அரசுடனும், அதன் ஆட்சியாளருடனும் தொடர்புபடுத்திக் கூறும் போது ஆரியகுளம் என்ற பெயர் எவ்வாறு வந்தது? எப்போது வந்தது? எந்த மன்னன் காலத்திற்கு உரியது? இக்குளம் யாருக்குச் சொந்தமானது? என்பன தொடர்பாக வேறுபட்ட கருத்துக்களும், பல கேள்விகளும் மக்களிடமும், வரலாற்று ஆர்வலர்களிடமும் நீண்டகாலமாக இருந்து வருவதை நாம் அறிவோம் அதுவும் இக்குளத்தின் மீளுருவாக்கப் பணி தொடங்கிய காலத்தில் இருந்து இவ்வாறான கேள்விகள் ஊடகங்கள் பலவற்றில் முன்னிலைப்படுத்தப்பட்டு வந்ததையும் காண முடிகின்றது. இந்த வரலாற்று மயக்கத்திற்கு ஆரியகுளம் என்பதன் முன்னொட்டுச் சொல்லாக வரும் "ஆரிய(ர்)" என்ற சொல் பயன்பாட்டிலிருப்பதும் ஒரு காரணமாக இருக்கலாம்.

இதற்கு கலாநிதி ஆறு.திருமுருகன் அண்மையில் பொருத்தமான பதிலையும், விளக்கத்தையும் வழங்கியிருந்ததுடன் இதையிட்டு வரலாற்று ஆசிரியர்கள் மௌனமாக இருக்கிறார்கள் என்ற தனது நியாயமான ஆதங்கத்தையும் வெளிப்படுத்தியிருந்தார். அவரின் கருத்திற்கு மேலும் நம்பகரமான சான்றுகளையும், விளங்கங்களையும் எடுத்துக் கூறுவதே இச் சிறுகட்டுரையின் நோக்கமாகும்.

### ஆரியச்சக்கரவர்த்திகளும் ஆரியகுளமும்

தமிழகத்தில் சோழரின் வீழ்ச்சியைத் தொடர்ந்து கி.பி. 12 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் எழுச்சியடைந்த இரண்டாம் பாண்டியப் பேரரசு அதன் சமகாலத்தில் தென்னிலங்கை மீதும், வட இலங்கை மீதும் ஆறு தடவைகளுக்கு மேல் படையெடுத்தது பற்றி அவர்கள் வெளியிட்ட சாசனங்கள் கூறுகின்றன.

இப்படையெடுப்புக்களின் தளபதிகளாக இருந்தவர்களே ஆரியச்சக்கரவர்த்திகள், சக்கரவர்த்திகள் என்ற பட்டத்தையும் பெற்றிருந்தனர். இப்பட்டங்களை படைத்தளபதிகள் அல்லது சேனாதிபதிகள் மட்டுமன்றி அரச நிர்வாகத்தில் உயர் பதவிகளில் இருந்தவர்களும் பெற்றிருந்தனர் என்பதனைப் பாண்டியர் காலச் சாசனங்கள் உறுதி செய்கின்றன. அவற்றுள் இலங்கை மீது படையெடுத்த ஆரியச்சக்கரவர்த்திகள் யார்? எந்த நாட்டவர்? எந்த அரச வம்சத்திற்கு உரியவர்கள்? எந்த மொழிக்குரியவர்கள்? என்பன தொடர்பான கேள்விகளுக்கு விடை கூறுவதாகவே சிங்கள வரலாற்று இலக்கியங்களில் ஒன்றான சூளவம்சத்தில் வரும் பின்வரும் கூற்றுக்கள் காணப்படுகின்றன:

"முன்பு பஞ்சம் ஒன்று நிலவிய காலத்திலே பாண்டிய இராச்சியத்தில் ஆட்சி புரிந்த சகோதரர்களான ஐந்து மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்தி என்னும் பெயர் கொண்ட தமிழ்ச் சேனாதிபதியின் தலைமையில் படையொன்றை அனுப்பி வைத்தார்கள். அவன் ஆரியனல்லானாயினும் மிகுந்த செல்வாக்கும் அதிகாரமும் கொண்ட பிரதானியாக விளங்கினான்.

இராச்சியத்தின் எல்லாப் பக்கங்களையும் அழித்துவிட்டு அரண்கள் பொருந்திய சுப பட்டணத்தினுள் (யாப்பகூவாவிற்குள்) அவன் புகுந்தான். அங்கிருந்த தந்ததாதுவையும், விலைமதிக்க முடியாத செல்வங்களையும் கவர்ந்து கொண்டு ஆரியச்சக்கரவர்த்தி பாண்டி நாட்டுக்குச் சென்றான். அங்கு பாண்டிய மன்னர் குலமெனும் தாமரையை மலர்விக்கின்ற கதிரவனையொத்த குலசேகர மன்னனுக்கு அவற்றைக் கொடுத்தான்".

மேற்கூறப்பட்ட கூற்றிலிருந்து ஆரியச்சக்கரவர்த்திகள் ஆரியர்கள் அல்லாத தமிழர் என்று கூறப்பட்டிருப்பது இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது. தமிழ்ப் பேரகராதியில் ஆரியன் என்ற சொல்லுக்கு தலைவன், பிராமணன் என்ற பொருள்களும் உள்ளன.

கி.பி.13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வட இலங்கை மீது மேற்கொள்ளப்பட்ட இன்னொரு படையெடுப்பு பற்றிய விரிவான செய்திகளை தமிழகத்தில் புதுக்கோட்டை மாவட்டத்தில் குடுமியாமலையிலுள்ள 1262 ஆண்டுக்குரிய பாண்டியரது கல்வெட்டு கூறுகின்றது. அக்கல்வெட்டில் தென்னிலங்கையிலும், வட இலங்கையிலும் இரு அரசுகள் இருந்ததாகவும், சிங்கள அமைச்சன் ஒருவனது வேண்டுதலின் பேரில் பாண்டியர் வட இலங்கை மீது படையெடுத்து ஆட்சியில் இருந்த சாவகனை அடிபணிந்து திறை செலுத்துமாறு கோரியபோது அதை அவன் ஏற்க மறுத்ததால் அவனைக் கொன்று அவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திவிட்டு இந்த வெற்றியின் நினைவாக தமது அரச இலட்சனையான இரட்டைக்கயல் (மீன்கள்) பொறித்த கொடிகளை கோணாமலையிலும், திரிகூடகிரியிலும் (திருகோணமலையில்) ஏற்றிவிட்டுத் திரும்பியதாகக் கூறுகின்றது.

ஆயினும் இந்த வெற்றியைத் தொடர்ந்து தமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றங்களால் சாகவனின் மைந்தனை ஆட்சியில் அமர்த்திய பாண்டியப் படைகளே அவனை அகற்றிவிட்டு கி.பி. 13 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் யாழ்ப்பாணத்தில் நல்லூரைத் தலைநகரமாகக் கொண்ட யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்தனர். இதனால் இவ்வரசு பாளி, சிங்கள, தமிழ் இலக்கியங்களில் ஆரியச்சக்கரவர்த்திகள் அரசு என்றே அழைக்கப்படுகின்றன.

இதனால் யாழ்ப்பாண அரசில் ஆட்சி புரிந்த தொடக்ககால மன்னர்கள் ஆரியச்சக்கரவர்த்திகள் என்பதை ஒரு வம்சப் பெயராகக் கொண்டு தமது பெயருடன் ஆரியன் என்ற பெயரையும் இணைத்துக் கொண்டனர். இதற்கு யாழ்ப்பாண வைபவமாலையில் கூறப்பட்டுள்ள குலசேகர சிங்கையாரியன், விக்கிரம சிங்கையாரியன், வரோதய சிங்கையாரியன், மார்த்தாண்ட சிங்கையாரியன், குணபூஷண சிங்கையாரியன், செயவீர சிங்கையாரியன், குணவீர சிங்கையாரியன், கனகசூரிய சிங்கையாரியன் முதலான எட்டு மன்னர்களின் பெயர்களைக் குறிப்பிடலாம். மேலும் ஆரியச்சக்கரவர்த்தி மன்னன் ஒருவன் கம்பளை அரசு மீது படையெடுத்தது பற்றிய தமிழ்க் கல்வெட்டொன்று தென்னிலங்கையில் கொணட்டகம என்ற இடத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அக்கல்வெட்டிலும் படையெடுத்த மன்னனை "பொங்கொலிநீர்ச் சிங்கையாரியன்" என்றே கூறப்பட்டுள்ளது. இது மேலும் யாழ்ப்பாண வைபவமாலையில் சொல்லப்பட்ட செய்தியை உறுதி செய்வதாக உள்ளது. இவ்வாதாரங்கள் யாழ்ப்பாண அரசு கால மன்னர்களின் பெயர்களுடன் ஆரியன் என்ற சொல்லும் இணைந்துள்ளதைக் காட்டுகின்றது.

ஆரியச்சக்கரவர்த்திகளால் தோற்றுவிக்கப்பட்ட யாழ்ப்பாண அரசைக் காலப்போக்கில் சுதேச மன்னர்களும் ஆட்சி செய்தனர். இவ்வரசு போர்த்துக்கேயரால் வெற்றி கொள்ளப்படும் வரை (1619 இல்) ஏறத்தாழ 350 ஆண்டுகள் சுதந்திர தமிழரசாக ஆட்சியில் இருந்துள்ளது. இவ்வரசின் வரலாற்றை விரிவாக ஆராய்ந்த பேராசிரியர் சி.பத்மநாதன் இலங்கைத் தமிழர் பண்பாடு தனித்துவமாக வளர்வதற்கு யாழ்ப்பாண அரசு ஒரு முக்கிய காரணம் எனக் கூறியிருப்பதுடன் அவ்வரசு காலத்தில் தமிழ் மொழி, சைவ சமயம், இலக்கியம், இசை, நடனம், நாடகம், சோதிடம், வைத்தியம், விவசாயம், வெளிநாட்டு வர்த்தகம், இராணுவக் கட்டமைப்பு என்பனவும் வளர்சியடைந்திருந்ததாகவும் குறிப்பிடுகின்றார்.

கி.பி. 14 ஆம் நூற்றாண்டில் எழுந்த 'ராஜாவலிய என்ற சிங்கள வரலாற்று இலக்கியம் சமகாலத்தில் ஆட்சியிலிருந்த றைகம, கம்பளை, யாழ்ப்பாண அரசுகள் பற்றிக் குறிப்பிட்டு அவற்றுள் யாழ்ப்பாண ஆரியச்சக்கரவர்த்திகளின் அரசே படைப் பலத்திலும், பொருளாதார வளத்திலும் மேலோங்கி இருந்ததாகவும் அவ்வரசு மலைநாடு தொட்டு தாழ்நிலப் பகுதிவரை ஒன்பது துறைமுகங்களில் இருந்து திறை பெற்றதாகவும் கூறுகின்றது.

பொதுவாக ஒரு நாட்டில் அல்லது ஒரு வட்டாரத்தில் ஆட்சி புரிந்த அரச வம்சங்க்ள் மற்றும் ஆட்சியாளர்களின் பெயர்கள், வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த இடப்பெயர்களுடனும், அவர்களது வரலாற்றுப் பணிகளுடனும் இணைந்து பேசப்படுவதுண்டு. இவ்வாரலாற்று நினைவுகள் பிற்காலத்தில் தொடர்ந்ததற்கும், காலப்போக்கில் மறைந்ததற்கும் பல ஆதாரங்கள் காணப்படுகின்றன.

இங்கே யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகள் தமிழகத்தில் இராமநாதபுரம் செவ்விருக்கை நாட்டு ஆரியச்சக்கரவர்த்தி நல்லூரை வாழ்விடமாகக் கொண்டவர்கள் எனப் பாண்டிய சாசனங்களும், பிற வரலாற்று மூலங்களும் உறுதி செய்கின்றன. இவர்கள் இராமேஸ்வரம் சேதுதலத்துடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டிருந்ததால் இவர்கள் சேதுகுலம் எனவும் அழைக்கப்பட்டனர்.

இச்சேது குலத்தையும், சேது தலத்தையும் நினைவு படுத்தும் வகையில் யாழ்ப்பாண அரசில் ஆட்சி புரிந்த ஆரியச் சக்கரவர்த்திகள் தாம் வெளியிட்ட நாணயங்களிலும், கல்வெட்டுக்களிலும், அரச கொடிகளிலும் சேதுவை ஒரு மங்கல மொழியாகப் பயன்படுத்தினர். இச்சொல் இன்றும் யாழ்ப்பாண அரசில் ஆட்சி புரிந்த ஆரியச் சக்கரவர்த்திகளின் முக்கிய வரலாற்று அடையாளமாகப் பார்க்கப்படுகின்றது.

(9 ஆம் பக்கம் பார்க்க)





**ஆரியகுளம் மகிழ்வூட்டும் திடல் திறப்பு விழா இன்றாகும்
அதனையொட்டி இக் கட்டுரை பிரசுரமாகிறது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதியை புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை



(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்குச் சொந்தமான இரட்டை வாய்க்கால் சந்தியில் இருந்து சாலை வரையான பதின்மூன்று கிலோமீற்றர் வீதியினைப் புனரமைக்குமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

குறித்த வீதி நீண்டகாலமாக புனரமைக்கப்படாமையால் பொதுமக்கள், விவசாயிகள், மீனவர்கள், பாடசாலை மாணவர்கள் என அனைவரும் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே குறித்த வீதியினை மிக விரைவில் புனரமைத்து தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

குறிப்பாக மாத்தளன், அம்பலவன்பொக்கணை, வலைஞர்மடம் உள்ளிட்ட கிராமங்களில் வசிக்கும் சுமார் 400 குடும்பங்களை சேர்ந்தவர்கள் மாத்திரமின்றி குறித்த வீதியை பயன்படுத்தி விவசாய மற்றும் மீன்பிடி நடவடிக்கைகளுக்கு செல்லும் பலரும் பல அசௌகரியங்களுக்கு முகம்கொடுக்கின்றனர் என மேலும் தெரிவித்தனர். (4-5-281)

# ‘ஒமிக்ரோன்’ திரிபு பரிசோதனை மன்னாரில் முன்னெடுக்கத் தீர்மானம்

## மன்னார் சுகாதாரப் பணிப்பாளர்

(மன்னார்)

“ஒமிக்ரோன்” திரிபு வைரஸ் இலங்கையிலும் பரவி உள்ளதா? என்பதற்கான தொடர் பரிசோதனைகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்ற நிலையில் வடமாகாணத்தில் மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் பி.சி.ஆர். மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது என மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்தார்.

மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் அவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது சர்வதேச அளவில் ஆதிக்கம் செலுத்தி உள்ள "ஒமிக்ரோன்" என்கிற வகை திரிபுடைய வைரஸ் இலங்கையிலும் பரவி உள்ளதா? என்பதற்கான தொடர் பரிசோதனைகள் மற்றும் ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இதன் ஓர் அங்கமாக வடமாகாணத்தில் மன்னார் உள்ளிட்ட பகுதிகளில் பி.சி.ஆர். மாதிரிகள் எதிர்வரும் மாதத்தில் சேகரிக்கப்பட்டு ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் ஆய்வுக்காக அனுப்பி வைக்கப்பட உள்ளது.

டிசெம்பர் மாதம் பண்டிகைக் காலம் என்பதால் பொதுமக்கள் அதிக அளவில் ஒன்று கூடும் சந்தர்ப்பம் உள்ளது.

எனவே பொதுமக்கள் ஒன்று கூடும் நிலைமைகளை தவிர்த்து சுகாதார விதிமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிக்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (4-5-285)





வவுனியாவில் உலக எயிட்ஸ் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு வாகன ஊர்வலம் நேற்று இடம்பெற்றது. உலக எயிட்ஸ் தினம் டிசெம்பர் மாதம் முதலாம் திகதி நினைவு கூரப்படுகிறது. அந்தவகையில் இலங்கையில் இம்முறை சமத்துவமின்மையை ஒழிப்போம், எயிட்ஸை ஒழிப்போம், பெருந்தொற்றை ஒழிப்போம் எனும் தொனிப்பொருளில் அனுஷ்டிக்கப்படுகின்றது.

(படம்: சதீஷ், வசந்தரூபன்)

# வவுனியாவில் நேற்று அதிக பனிமூட்டம்

## சாரதிகள் அசௌகரியம்



(நெளுக்குளம்)

வவுனியாவில் நேற்று அதிகாலை அதிகளவான பனிமூட்டம் காணப்பட்ட நிலையில் சாரதிகள் வாகனங்களை செலுத்துவதில் பெரும் இடையூறுகளை சந்தித்தனர்.

வவுனியா நகர்ப்புறம் உட்பட அனைத்து இடங்களிலும் அதிகளவான பனி மூட்டம் காணப்பட்டது. இதன் காரணமாக பாடசாலை மாணவர்கள், வேலைக்குச் செல்வோர், வாகனச்சாரதிகள் எனப் பலரும் சிரமங்களை எதிர்கொண்டனர். அண்மைக்காலமாக அதிகளவு மழையுடன் கூடிய காலநிலை வவுனியாவில் காணப்பட்ட போதிலும் தற்போது அதிக பனி மூட்டமாக காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (4-5-299)

# மாணவர்களின் போக்குவரத்து தொடர்பில் இன்று ஆராய்வு

## முல்லை. அரச அதிபர்



(அக்கராயன்)

முல்லைத்தீவு மாந்தை கிழக்கு மாணவர்களின் போக்குவரத்து நெருக்கடி தொடர்பாக இன்று மாவட்டச் செயலகத்தில் நடைபெறவுள்ள போக்குவரத்து துறையினருடனான கலந்துரையாடலில் ஆராயப்பட உள்ளதாக முல்லைத்தீவு மாவட்டச் செயலாளர் க.விமலநாதன் தெரிவித்தார்.

மாந்தை கிழக்கில் பாடசாலைகளுக்கு தனியார் பேருந்தில் செல்கின்ற மாணவர்கள் பாடசாலை முடிந்தவுடன் வீடு திரும்ப முடியாதது தொடர்பாக வினவிய போது மாணவர்கள் வீடு திரும்ப முடியாது இருப்பது தொடர்பாக தனக்கு முறைப்பாடுகள் கிடைக்கவில்லை என ஊடக வழியாகத்தான் தகவலை அறிந்து கொண்டேன்.

இன்று போக்குவரத்து துறையினருடன் கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. இக்கலந்துரையாடலில் இவ்விடயம் தொடர்பாக ஆராயப்படும் எனத் தெரிவித்தார். (4-5-350)

# மீளுருவாக்கப்பட்ட ஆரியகுளம்...

(8 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

மேலும் ஆரியச்சக்கர வர்த்திகள் வாழ்ந்த தென் தமிழகத்தில் அதிலும் குறிப்பாக பாண்டியரின் ஆதிக்கம் நிலவிய இடங்களில் ஆரியகுளம், ஆரிய நல்லூர், ஆரியச்சக்கரவர்த்தி நல்லூர், ஆரிய கவுண்டனூர், ஆரியக்கவுண்டன் வளவு முதலான பெயர்கள் பரந்த பிரதேசத்திற்குரிய இடப்பெயர்களாக உள்ளன.

வரலாற்றுப் பழமை வாய்ந்த இவ்விடப்பெயர்கள் தற்காலத் தமிழகத்தின் உள்ளூராட்சி மன்றங்களின் பெயர்களாகவும் இருந்து வருகின்றன. இப்பெயர்கள் ஆரியச்சக்கரவர்த்திகளின் நிர்வாகத்திற்கு உட்பட்டிருந்ததன் காரணமாகத் தோன்றியவை எனக் கூறப்படுகின்றது.

அதிலும் யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் என்ற அதே பெயர் தென்தமிழகத்தில் ஒரு உள்ளூராட்சி மன்றத்தின் பெயராக இருப்பது யாழ்ப்பாணத்தில் உள்ள ஆரியகுளம் ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியை நினைவுபடுத்த தோன்றியதை உறுதிப்படுத்துவதாக உள்ளது.

இற்றைக்கு 100 ஆண்டுகளுக்கு முன்னர் (1913ஆம் ஆண்டு) "ஈழநாடும் தமிழ்ச் சங்கமும்" என்ற நூலில் அமரர் முத்துத்தம்பிப்பிள்ளை அவர்கள் குணபூஸணசிங்கையாரியனின் அமைச்சன் ஒருவன் ஆற்றிய பணிகள் பற்றி விரிவாகக் கூறும் போது குணபூஸணசிங்கையாரியனின் பெயரில் ஆரியகுளமும், அவனது மனையும் இருந்ததாகக் குறிப்பிடுகின்றார்.

மேலும் அவர் இம்மன்னன் காலத்திலேயே 63 நாயன்மார்களுக்கு நாயன்மார் கட்டில் ஆலயம் அமைக்கப்பட்டதாகவும் கூறியுள்ளார்.

அண்மையில் நாயன்மார் கட்டு ஆலயத்திருக்குளம் மீளுருவாக்கம் செய்யப்பட்டபோது ஒரு அரிய தமிழ்க் கல்வெட்டு கண்டுபிடிக்கப்பட்டு அது யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இந்திர பாலா தொல்லியல் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இக்கல்வெட்டு காலத்தால் சற்றுப் பிற்பட்டதாக இருப்பினும் அக்கல்வெட்டில் இவ்வாலயத் திருக்குளத்தை அமைத்தவன் சிங்கையாரியன் என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாதாரங்களை வைத்துப் பார்க்கும் போது ஆரியகுளம் என்ற பெயர் யாழ்ப்பாண அரசைத் தோற்றுவித்த ஆரியச்சக்கரவர்த்திகளின் ஆட்சியை நினைவுபடுத்திக் காட்டும் ஒரு மரபுரிமைச் சின்னம் என்பது உறுதியாகத் தெரிகின்றது. இதை மறுதலித்துக் கூறுவதற்கு வேறு எந்த ஆதாரங்களும் காணப்படவில்லை.

மரபுரிமைச் சின்னம் என்பது அது சார்ந்த இனத்தின், பண்பாட்டின் அடையாளம், ஆணிவேர் எனப் பார்க்கப்படுகின்றது.

விலைமதிக்க முடியாத இம்மரபுரிமைச் சொத்துக்களைச் சிறிதும் பிசகாமல் எதிர்காலச் சந்ததியிடம் கையளிக்க வேண்டிய நம்பிக்கை நாற்றுக்களாவும் இவை காணப்படுகின்றன.

தமிழ் மக்களின் மரபுரிமைச் சின்னங்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதில் எமது மக்களிடமும், மக்கள் பிரதிநிதிகளிடமும் ஒருமித்த கருத்துக்கள் இருப்பதையே காணமுடிகின்றது.

இது அவர்களுடன் எனக்குள்ள நீண்டகாலத் தொடர்பின் வெளிப்பாடு. இன்று நிறைவு பெற்றுள்ள ஆரியகுள மீளுருவாக்கம் என்பது எமது மரபுரிமைச் சின்னங்களை நாமே பாதுகாக்கமுடியும் என்பதன் ஒரு அடையாளமாகவும், தொடக்கப்புள்ளியாகவும் பார்க்கப்படலாம்.

எதிர்காலத்தில் நாம் அனைவரும் ஒன்றிணைந்து எமது மரபுரிமைகளைப் பாதுகாப்பதற்கு ஆரியகுள மீளுருவாக்கப் பணி ஒரு முன் மாதிரியாக இருக்கவேண்டும் என்பதே அனைத்து தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகும்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AB, B இரத்தப் பிரிவினரை அதிகம் தொற்றும் கொரோனா

## இந்திய ஆய்வில் தகவல்

(கொழும்பு)

AB மற்றும் B இரத்தப் பிரிவுகளை சேர்ந்தவர்களுக்கு கொரோனாத் தொற்றும் வாய்ப்பு அதிகம் என ஆய்வில் தெரியவந்துள்ளது.

கடந்த ஆண்டு ஏப்ரல் 8ம் திகதி முதல் ஒக்டோபர் 4ம் திகதிவரை டில்லியிலுள்ள ஶ்ரீகங்காராம் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட 2 ஆயிரத்து 586 கொரோனா நோயாளிகளை வைத்து இந்த ஆய்வை மேற்கொண்டது.

இந்த ஆய்வில், B இரத்தப் பிரிவை கொண்ட ஆண் நோயாளிகள் அதே இரத்தக் குழுவைக் கொண்ட பெண் நோயாளிகளைக் காட்டிலும் கொரோனாத் தொற்றால் அதிகம் பாதிக்கப்படுவதாகவும் AB இரத்தப் பிரிவை உடைய 60 வயது மற்றும் அதற்கு குறைந்த வயதுடைய நோயாளிகளுக்கு நோய்த் தொற்று ஏற்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் என்றும் தெரியவந்துள்ளது. (நி-5)

# பொது அறிவித்தல்-2022

# வலிகாமம் தெற்கு பிரதேச சபை- சுன்னாகம்

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 01 | ஆதனவரி | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட ஆதன உரிமையாளர்கள் | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் கட்டளைச்சட்டத்தின் கீழ் உரித்தாக்கப்பட்டுள்ள அதிகாரங்களின்படி 2022ம் ஆண்டுக்கான ஆதனவரி சுன்னாகம், உடுவில் உப அலுவலகங்களுக்கான மீள்மதிப்பீடு செய்யப்பட்ட வருடாந்த பெறுமதியின் 14% ஆகவும் ஏழாலை உப அலுவலகத்திற்கான ஆதனவரி வருடாந்த பெறுமதியின் 15% ஆகவும் அறவீடு மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கமைய 2022ம் ஆண்டுக்கான ஆதனவரியை 31.01.2022ஆம் திகதிக்கு முன்னர் செலுத்துவோர் ஆண்டுக்கான மொத்தவரியில் 10% கழிவினைக் பெற்றுக்கொள்ள முடியும் என்பதோடு ஒவ்வொரு காலாண்டுற்குமுரிய வரியை குறித்த கந்தாயத்தின் முதல் மாத முடிவிற்குள் செலுத்துவோருக்கு காலாண்டு வரியில் 5% கழிவு வழங்கப்படும் என்பதையும் அறியத்தருகின்றேன். குறிப்பிட்ட திகதிக்குள் ஆதனவரியை செலுத்தத் தவறின் விறாந்துக்கட்டணமாக வெற்றுக்காணி அல்லது வதிவிட ஆதனங்களுக்கு 15% உம் ஏனைய ஆதனங்களுக்கு 20% உம் ஆதனவரியுடன் சேர்த்து அறவிடப்படும். எனவே குறித்த ஆதனவரிகளை 31.01.2022ஆம் திகதிக்கு முன் எமது உப அலுவலகங்களில் முழுமையாகச் செலுத்தி வரிக்கழிவுகளைப் பெற்று ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். |
| 02 | ஆதனப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்தல் | ஆதனப் பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்யப்படாத ஆதனச் சொந்தக்காரர்கள் | பெயர் மாற்றம் செய்வதற்குரிய ஆவணங்களை பிரதேச சபை உப அலுவலகங்களில் சமர்ப்பித்து பெயர்மாற்றம் செய்யுமாறு கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள். |
| 03 | 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் கீழ் கட்டட அனுமதி வழங்கல் | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பொதுமக்கள் மற்றும் அரச, தனியார் நிறுவனங்கள் | 1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள், முட்கம்பித்தூண் அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதிபெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்<br>2. புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியிலிருந்து ஒருவருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாவிடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியைப் புதுப்பிக்கவேண்டும்.<br>3. அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்புகொண்டு படிவங்களைப்பெற்று பூர்த்திசெய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.<br>4. சபை எல்லைக்குள் குழாய்க் கிணறுகள் அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.<br>5. அனுமதியற்ற கட்டடங்களை முறைப்படுத்தி சீர்செய்கை நடவடிக்கைக்கான தண்டப்பணம் 1597/8 ஆம் இலக்க 2009.04.17 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகை பகுதி I தொகுதி (I) பொது அட்டவணை V இன் மேவுதல் அங்கீகாரங்கள் பிரகாரம் அறவீடு செய்யப்படும்<br>6. 2235/54 ஆம் இலக்க 2021.07.08 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிசக்குடியரசு அதிவிசேஷ வர்த்தமானப் பத்திரிகை பகுதி I தொகுதி (I) இன் பிரகாரம் அங்கீகாரங்கள் வழங்கப்படும்<br>பொதுப் போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் அமைக்கப்படும் நிரந்தர அலங்கார அமைப்புக்கள் அமைத்தல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 04 | காணி உப பிரிவிடுகை | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்ட ஆதன உரிமையாளர்கள் | ஆதனம் ஒன்று பல துண்டுகளாகப் பிரிக்கப்பட்டு உரிய ஆவணங்களைச் சமர்ப்பித்து அனுமதிபெற்றுக்கொள்ளல் வேண்டும். |
| 05 | சூழல் பாதுகாப்பு உரிமம் | தொழில் வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்வோர் | சூழல் பாதுகாப்பு உரிமம் பெற்றுக்கொள்ள வேண்டிய செயற்பாடு தொடர்பாக 2000 ஆம் அண்டு நவம்பர் 22ஆம் திகதி 1159/ 22ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் "இ" பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள தொழில்/வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்புகொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்திசெய்து உரியகட்டணத்தைச் செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக் கொள்ளலாம். |
| 06 | வியாபார அனுமதிப்பத்திரம் 2022 | பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சகல வியாபாரம்/ தொழில் நிலையத்தவர்கள் | இப்பிரதேச எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்குப் பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை உடுவில், சுன்னாகம், ஏழாலை ஆகிய உப அலுவலகங்களில் 2022ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31.03.2022 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade license) பெற்றுக்கொள்ளவும். 31.03.2022ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப் பத்திரத்தை பெற்றுக்கொள்ளாதவர்கள் மீது சட்டநடவடிக்கை எடுக்கப்படும். |
| 07 | துவிச்சக்கரவண்டி உரிமம் | துவிச்சக்கரவண்டி உரிமையாளர்கள் | துவிச்சக்கரவண்டிகள் வைத்திருப்போர் 2022.03.31 ஆம் திகதிக்கு முன் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி 2022ம் ஆண்டுக்கான துவிச்சக்கரவண்டி உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும். |
| 08 | மிருகங்களுக்கான உரிமம் | வளர்ப்பு நாய் உரிமையாளர்கள் | வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 2022.03.31 ஆம் திகதிக்கு முன் உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களை செலுத்தி பதிவு செய்து 2022 ஆம் ஆண்டுக்கான மிருக உரிமங்களைப் பெற்றுக்கொள்ளவும் |
| 09 | விளம்பரங்கள் அமைத்தல் அல்லது காட்சிப்படுத்தல் | விளம்பரங்களை காட்சிப்படுத்தும் முகவர்கள், நிறுவனங்கள், வர்த்தக உரிமையாளர்கள் | பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதியைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்தவேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும். கட்டணவிபரம் பின்வருமாறு. |

| தொ. இல | விபரம் | கட்டணம் (1 சதுர அடி) |
|---|---|---|
| 01 | சுவர் ஒன்றில் அல்லது மதில் ஒன்றில், பலகை ஒன்றில் அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் (தகரம்,பிலெக்ஸ்,லுமினஸ்) அல்லது வேறு ஏதேனும் ஒன்றின் உதவியுடன் காட்சிக்கு வைக்கப்படுகின்ற நிரந்தர விளம்பர அறிவித்தல் | 100.00 |
| 02 | ஒரு மாதத்திற்கு மேல் 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லைக்கு காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | 30.00 |
| 03 | ஒரு மாதத்திற்கு அல்லது அதற்கு குறைவாகக் காட்சிக்கு வைக்கப்படுகின்ற பதாகை | 20.00 |
| 04 | கட் அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு கூடுதலான கால எல்லை | 40.00 |
| 05 | கட் அவுட்களுக்கு 03 மாதங்களுக்கு குறைவான கால எல்லை | 30.00 |
| 06 | வர்த்தக நிலையங்களுக்குள் காட்சிக்கு வைக்கப்படுகின்ற தனது வர்த்தக நாமத்தை உடைய வர்த்தக பெயர்ப்பலகை தவிர்ந்த வேறு பெயர்ப்பலகை | 100.00 |
| 07 | டிஜிற்றல் பெயர்ப்பலகை | 150.00 |
| 08 | ஒளிபுகக் கூடிய விளம்பரம் | 150.00 |

| இல | விடயம் | தொடர்புபட்டோர் | வருடாந்த அறிவித்தல் |
|---|---|---|---|
| 10 | வீதி ஒழுங்கும் தெருவோர வியாபாரமும் | பாதசாரிகள், வாகன ஓட்டுநர்கள் மற்றும் வியாபாரிகள் | வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது, காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு வர்த்தக நிலைய உரிமையாளர்களிற்கு அறியத்தருகின்றேன். சந்தைச் சுற்றாடலில் இருந்து 500மீற்றர் சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 11 | பொதுச் சுகாதாரத்தைப் பேணுதல் | உணவு கையாளும் நிலையங்கள் | உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.<br>2034/33 ஆம் இலக்க 2017.09.01 ஆம் திகதிய இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அதிவிசேட வர்த்தமானப்பத்திரிகையின் பிரகாரம் 20 மைக்ரோன் அல்லது அதற்கு குறைவான தடிப்புள்ள பொலித்தீன் பாவனை தடைசெய்யப்பட்டுள்ளது |
| 12 | பொது இடங்களில் கழிவு போடுதலும் டெங்கு நுளம்புப் பெருக்கத்திற்கு ஊக்கம் அளிப்பதும் | பொதுமக்கள், வியாபார நிலையங்கள், அரச, தனியார் நிறுவனங்கள் | திண்மக்கழிவுகளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கும்போது அவை தரம்பிரித்து வழங்கப்பட வேண்டும் என்பதுடன் திண்மக்கழிவுகள் பொது இடத்தில் கொட்டுதல் முற்றாக தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத்திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும்<br>அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்புரவு செய்யப்படல் வேண்டும்<br>பொதுப்போக்குவரத்திற்கு இடையூறாக வீதியோரங்களில் பூமரங்கள் நாட்டுதல் முற்றாக தடைசெய்யப்பட்டுள்ளது. |
| 13 | படவரைஞர்களை பதிவு செய்தல் | படவரைஞர்கள் | 2022ஆம் ஆண்டு படவரைஞராகப் பதிவுசெய்வதற்கு விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்துள்ளவர்களும் 2022ஆம் ஆண்டு ஜனவரி 31ஆம் திகதிக்கு முன்னர் தமது பதிவுகளை மேற்கொள்ளவும்/ புதுப்பித்துக்கொள்ளவும். மேலதிக விபரங்களுக்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலகநேரத்தில் தொடர்புகொள்ளவும். |
| 14 | தரகர் முறைநீக்கல் | சந்தைக் குத்தகையாளர்கள் | எமது பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சந்தைகளில் தரகர் மூலமான நடைமுறை முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடக்குமாறு சந்தைக் குத்தகையாளர் வேண்டப்படுகின்றனர். |

மேற்கூறிய விடயங்கள் தொடர்பில் பொதுமக்கள் மற்றும் தொழில்புரிபவர்களின் கவனம் ஈர்க்கப்படுகின்றது. குறித்த அறிவித்தலின் பிரகாரம் செயற்படத் தவறுபவர்கள் மீது சட்டநடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**தவிசாளர்**
**வலிகாமம் தெற்கு பிரதேசசபை,**
**சுன்னாகம்.**
**0212240017/ 0212244045**

(C-3139)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தனிமைப்படுத்தல் சட்டத்தை அரசு முறைகேடாக பயன்படுத்துகிறது

## மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம்

(கொழும்பு)

அரசாங்கத்தினால் வெளியிடப்படும் புதிய சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்கள் மூலம் அடிப்படை உரிமைகள் மீது கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதுடன் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்கள் கைது செய்யப்பட்டு, வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்தப்படுகின்றார்கள். இவை தனிமைப்படுத்தல் சட்டமும் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களும் முறைகேடாகப் பயன்படுத்தப்படுவதையே காண்பிக்கின்றன.

அத்தோடு சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தரப்பினர் தன்னிச்சையாகவும் பக்கச்சார்பான முறையிலும் செயற்படுவதற்கும் இவை வாய்ப்பேற்படுத்தியிருப்பதாக மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் விசனம் வெளியிட்டுள்ளது.

கொவிட் - 19 வைரஸ் தொற்றுப்பரவலுக்கு மத்தியில் நாட்டில் இடம்பெறும் ஆர்ப்பாட்டங்களை அரசாங்கம் கையாளும் விதம் மற்றும் அதன் சட்டரீதியான தன்மை தொடர்பில் வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது, ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவதற்கான உரிமை என்பது ஜனநாயகத்தின் இயங்குகைக்கு அவசியமானது எனினும் அதேவேளை, அந்த உரிமைக்கான சில மட்டுப்பாடுகளும் காணப்படுகின்றன.

பொறுப்புக்கூறல், மனித உரிமைகளுக்கான அங்கீகாரம், சுதந்திரம் உள்ளிட்ட பல்வேறு விடயங்களை முன்னிறுத்திப் போராட்டங்கள் மேற்கொள்ளப்பட்ட நீண்டகால வரலாறு இலங்கைக்கு இருக்கிறது.

நவம்பர் மாதம் 16 - 30 ஆம் திகதிவரை அமுலாகும் வகையிலான புதிய சுகாதாரப்பாதுகாப்பு வழிகாட்டல்கள் கடந்த நவம்பர் மாதம் 15 ஆம் திகதி வெளியிடப்பட்டதுடன் அதன்படி வெளியரங்கில் நடைபெறும் தனியார் ஒன்றுகூடல்கள் தடைசெய்யப்பட்டன.

குறிப்பாக அண்மைக்காலங்களில் ஏற்பட்ட கொவிட் - 19 வைரஸ் பரவலுக்கு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களே காரணம் என்று பழி சுமத்தும் விதமான கருத்துக்களும் வெளியிடப்பட்டன.

புதிய வழிகாட்டல்களை வெளியிடுவதன் ஊடாக அடிப்படை உரிமைகள் மீது கட்டுப்பாடுகளை விதித்தல், ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டவர்களைக் கைது செய்வதுடன் அவர்களை வலுக்கட்டாயமாகத் தனிமைப்படுத்தல் என்பன தனிமைப்படுத்தல் சட்டமும் சுகாதாரப்பாதுகாப்பு வழிகாட்டல்களும் முறைகேடாகப் பயன்படுத்தப்படுகின்றமையை வெளிக்காட்டியுள்ளன.

அத்தோடு இவை சட்டத்தை நடைமுறைப்படுத்தும் தரப்பினர் தன்னிச்சையாகவும் பக்கச்சார்பான முறையிலும் செயற்படுவதற்கு வாய்ப்பேற்படுத்தியுள்ளன என்று அவ்வறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (நி)

# கொரோனா மரணம் இலங்கையில் அதிகம்



(கொழும்பு)

ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது இலங்கையிலேயே கொரோனா மரணங்களின் எண்ணிக்கை அதிகரித்துக் காணப்படுகின்றது என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரத்ன தெரிவித்தார்.

நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற பாராளுமன்ற சுகாதார அமைச்சு மீதான வரவு-செலவுத் திட்ட குழுநிலை விவாதத்தில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் தொற்றை கட்டுப்படுத்துவதிலும் அரசியல் தலையீடுகள் இருந்தமையே இதற்குக் காரணம் எனவும் ராஜித சேனாரத்ன குற்றம் சுமத்தினார். (நி)

# வேட்பாளரால் செலவிடப்படும் பணம் தேர்தலின்போது தாக்கம் செலுத்தும்

(கொழும்பு)

தேர்தல்களின் போது வேட்பாளர்கள் செலவிடும் தொகையை வரையறை செய்வது குறித்த சட்ட வரைபினை தயாரிக்குமாறு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ உத்தர விட்டுள்ளார்.

தேர்தலின் போது மெய்யான மக்களின் பிரதிநிதித்துவம் பிரதிபலிக்கப்பட வேண்டும் எனவும் மிதமிஞ்சிய அளவில் வேட்பாளர் ஒருவர் பணத்தை செலவிட்டால் மக்கள் வாக்களிக்கும் போது அது தாக்கத்தை செலுத்தும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.



இந்தியா உள்ளிட்ட பல நாடுகளில் தேர்தலின் போது வேட்பாளரின் தேர்தல் செலவுகளை வ[illegible]கும் சட்டங்கள் அ[illegible] செய்யப்பட்டுள்ளன.

தேர்தல் செலவுகளை வரை யறுக்கும் உத்தேச சட்ட முன் மொழிவுகள் அடங்கிய அமைச்சரவை பத்திரம் கடந்த 2017 ஆம் ஆண்டில் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் தேர்தல் செலவுகளை கட்டுப்படுத்துவது தொடர்பில் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவினால் முன் வைக்கப்பட்ட அமைச்சரவை பத்திரத்திற்கு அண்மையில் அனுமதி வழ[illegible] (நி-5)

# இன்று ஒரு தகவல்

## கூடுவிட்டுக் கூடு பாய்வோம்

மகிழ்ச்சியான வாழ்வுக்கு முதற்படியாக நம்மை நாம் புரிந்து கொள்வதோடு மற்றவர்களையும் புரிந்து கொள்ள வேண்டும்.

மற்றவர்களின் அசைவுகளையும் நடவடிக்கைகளையும் நாம் கவனிக்க வேண்டும். அவற்றின் மூலமாக வெளிப்படும் அவர்களின் இயல்புகளை, உணர்ச்சிகளை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

அவற்றுள் நியாயமானவற்றை ஏற்று வரவேற்க வேண்டும். மதிப்புக் கொடுக்க வேண்டும்.

தமது கட்சிக்காரர்தான் வெற்றி பெற வேண்டும் என்று எண்ணுவது சட்டத்தரணிகளின் இயல்பு.

நியாயம் வெளிப்பட வேண்டும் என்று எண்ணுவது நீதிபதியின் இயல்பு. மற்றவர்கள் செய்வனவெல்லாம், சொல்வனவெல்லாம் தவறானவை. நாம் சொல்லுபவை–செய்பவையெல்லாம் நியாயமானவை என்ற தவறான நிறம் கொண்ட கண்ணடியை அணிந்து கொண்டால் காட்சிகளும் அதன் படிதான் தெரியும்.

வாதி, பிரதிவாதி இருவரின் நிலையையும் தீர ஆராய்ந்து முடிவுக்கு வரும் நீதிபதி போல் நாமும் நம்மையும் நம்முடன் பழகுகின்றவர்களின் நிலையையும் உணர்ந்து ஒரு முடிவுக்கு வர வேண்டும்.

மாறாக சுயநலம் என்னும் கண்ணாடியை அணிந்து கொண்டால் எடுக்கப்படும் முடிவுகளின் பின்விளைவுகள் எமக்கு பாதகமாகவே அமையும்.

இத்தகையவர்கள் தங்கள் தொழிலில் தோல்வி அடைவது மட்டுமல்ல நட்பையும் அன்பையும் பாசத்தையும் பெற இயலாதவர்களாக ஆகி வாழ்விலும் தோல்வி காண்பார்கள்.

நம்மைப்போலவே மற்றவர்களுக்கும் உணர்ச்சிகள் உண்டு. நாம் அவர்கள் நிலையில் இருந்தால் நம் முடிவு என்னவாக இருக்கும் என்றெல்லாம் எண்ணிப்பார்க்க வேண்டும்.

இன்னும் எளிமையாகச் சொல்ல வேண்டுமானால் விக்கிரமாதித்தன் கூடுவிட்டுக் கூடு பாய்ந்ததாகச் சொல்லுவார்களே அதுபோல் மற்றவர்களின் மனதிற்குள் நாம் பாய்ந்து விட வேண்டும்.

அவர்கள் நோக்கில் பார்க்கும் போதுதான் அவர்களின் வாதங்கள், போக்குகள் ஆகியவை நியாயமாகத் தென்படத் தோன்றும்.

உரிமையும் அதிகாரமும் ஒரு சேரப் பெற்றிருந்தாலும் மற்றவர்களின் உணர்ச்சிகளை மதித்துப் புரிந்து கொள்ளும் தன்மை – ஓ அது எத்தகைய மகத்தான செயலாக இருக்கும்.

அது மட்டுமல்ல மற்றவர்களால் விரும்பப்படுவதற்கும் வெற்றிகரமான வாழ்க்கையை நடத்திச் செல்வதற்கும் அது பெரும் உறுதுணையாக இருக்கும்.

**லேனா தமிழ்வாணன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிறுவர் அரங்கம்

## ஆறாவது முட்டாள்

அவன், "ஐயா, நான் என் உடைகளையும் கொஞ்சம் பணத்தையும் ஓர் இடத்தில் வைத்துவிட்டுக் குளித்தேன்.

குளித்துவிட்டு வந்து பார்த்தால் பணத்தையும், உடைகளையும் காணோம்" என்று கவலையுடன் கூறினான்.

"ஏதாவது அடையாளம் வைத்து இருந்தாயா?" "ஆமாம், அடையாளத்தையும் காணோம்."

"என்ன அடையாளம்? "வானத்தில் வெண் மேகம் ஒன்றிருந்தது. அதை அடையாளமாகக் கொண்டு அதன் அடியில் அவற்றை வைத்தேன்"

அவனது முட்டாள் தனத்தைப் புரிந்து கொண்ட அப்பாஜி அவன்பெயரோடு விலாசத்தையும் குறித்துக் கொண்டார். மாலை ஆறு மணி அப்பாஜி அரசனிடம் விரைந்து சென்றார். நான்கு முட்டாள்களுடைய விலாசத்தையும் கொடுத்தார்.

கிருஷ்ணதேவராயர் அவற்றைப் பார்த்தார். முட்டாள்களின் விபரங்களை அறிந்து ரசித்து சிரித்த அரசன், "அமைச்சரே, இன்னும் இரண்டு முட்டாள்களின் விலாசம் எங்கே?" என்று கேட்டார்.

அப்பாஜி, "அரசே, ஒரு பெரிய சாம்ராச்சியத்தின் மந்திரி நாள் முழுவதும் முட்டாள்களைத் தேடிக் கொண்டு அலைந்தது முட்டாள் தனமல்லவா! ஆகவே, எனது விலாசத்தை ஐந்தாவதாக எழுதிக் கொள்



ளுங்கள்" என்று பணிவோடு வேண்டினார். அரசரும் அப்பாஜியின் முகவரியை எழுதிக் கொண்டார். பிறகு, "அமைச்சரே, ஆறாவது முட்டாளின் விலாசம் எங்கே?" என்று அரசர் ஆர்வத்துடன் கேட்டார். "அரசே, கோபித்துக் கொள்ளாதீர்கள்! உங்கள் விலாசம் உங்களுக்குத் தெரியாதா? ஒரு நாட்டின் அமைச்சருக்கு என்ன வேலை கொடுக்கவேண்டும்என்று ஒரு ஒழுங்கு கிடையாதா? நாம் அறிவாளிகளைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்களால் பல நன்மைகளைப் பெறவேண்டுமே தவிர, முட்டாள்களைத் தேடிக் கண்டு பிடித்து, அவர்களது தொடர்பால் நம்மையும் முட்டாளாக்கிக் கொள்ளக் கூடாதல்லவா!" என்று உருக்கமாகக் கூறினார்.

அரசனுக்குத் தான் செய்த தவறு புரிந்து விட்டது. தன் கையிலிருந்து நான்கு முட்டாள்களின் விலாசத்தையும் உடனே கிழித்து எறிந்தார்.

அப்பாஜியின் அறிவுக் கூர்மையையும் துணிச்சலையும் பாராட்டி அவருக்குப் பரிசு அளித்தார்.

(முற்றும்)

# மகாபாரதம்

நாட்டு நலனில் அக்கறை கொண்ட முனிவர் அமைச்சர்களுடன் மன்னன் இருக்கையில் அங்கு சென்றார். அமைச்சருள் ஒருவரை நோக்கி "நீ செய்த அரச குற்றங்களை நான் அறிவேன்.

அரசாங்க உடைமைகளைத் திருடியதையும், செல்வத்தைக் கொள்ளை அடித்ததையும் நான் என் காகம் மூலம் அறிந்து கொண்டேன். நீ செய்தது சரிதானா என உன் மனச் சாட்சியைக் கேட்டுப் பார்" என்றார்.

முனிவரின் அப்பேச்சைக் கேட்ட அவையோர் அதிர்ச்சி அடைந்தனர். பின் கோசல நாட்டில் எங்கும் காகம் மொழி பற்றியே பேசப்பட்டது.

அதிகாரிகளின் ஒழுக்கக் கேட்டை மக்கள் கடுமையாக விமர்சனம் செய்யத் தொடங்கி




னர். அமைச்சர்கள் பற்றிய புகார்கள் எங்கும் எழுந்தன.

இந்நிலையில் குற்றம் புரிந்தவர்கள் அனைவரும் முனிவருக்கு எதிராகச் சதி செய்யத் தொடங்கினர். முனிவரின் காகத்தைத் தீர்த்துக் கட்டுவது என முடிவெடுத்தனர்.

முனிவர் உறங்கிக் கொண்டிருந்த போது கூண்டிலேயே அக்காகத்தைக் கொன்றனர்.

காலையில் எழுந்த முனிவர் காகத்தின் கதி கண்டு வருந்தினார். மன்னனைக் காணச் சென்றார்.

க்ஷேமதரிசி என்னும் அம் மன்னனை நோக்கி "மன்னா..உன்னை நான் அடைக்கலம் அடைந்தேன். என்னைக் காப்பாற்ற வேண்டுகிறேன். உனக்குச் சிலவற்றைக் கூற விரும்புகிறேன்.

உன்னைச் சார்ந்த சிலர் உனக்குக் கேடு செய்கின்றனர். அரசாங்க பொக்கிஷத்தைச் சிறிது சிறிதாகத் திருடுகின்றனர். நான் இதை என் காகத்தின் மூலம் அறிந்தேன். உன்னைச் சார்ந்தவர்களின் கோபம் காகத்திடம் சென்று அதனைக் கொன்று விட்டது.

உயிர்களிடம் கருணை அற்ற அவர்கள்வேறொரு திட்டத்தையும் வைத்துள்ளனர். உன் சமையல் காரர் மூலம்உன்அழிவை விரும்புகின்றனர்.

ஆகவே நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். அவர்களிடம் நான் கொண்ட அச்சத்தால் நான் வேறு ஆசிரமம் செல்ல விழைகிறேன்.

அவர்கள் கோபத்தால் என் மீது வீசிய அம்பு என் காகத்தைக் கொன்று விட்டது. பயங்கரமான விலங்குகளால் சூழப்பட்ட குகையில் நுழைவது போல துன்பம் தருவது, கொடியவர்களால் சூழப்பட்ட அரச நீதியில் நுழைவது.

ஆயினும் அரச நீதி என்னும் நதியைக் காகம் என்னும் படகைக் கொண்டு கடந்து வந்தேன். உன் அரசு வஞ்சகர்களால் சூழப்பட்டுள்ளது. இந்நிலையில் நீ யாரிடமும் நம்பிக்கை வைக்க முடியாது.

நிலைமை இப்படியிருக்கையில் நான் எப்படி இங்கு தங்குவது? தீமையின் கை இங்கு ஓங்கி உள்ளது. நன்மை செய்பவன் கொல்லப்படுகிறான். தீமை செய்பவனை யாரும் கண்டுக் கொள்வதில்லை.

நல்ல ஆட்சியில் நல்லவர் துன்பம்இல்லாது இருப்பர். தீயவர் தண்டிக்கப்படுவர். உனது ஆட்சி சுழல்கள் நிறைந்த அபாயகரமான நதியாக இருக்கிறது.

நீயோ நஞ்சு கலந்த உணவாக இருக்கிறாய். அதாவது தீயோரின் ஆலோசனைதான் உன் நெஞ்சில் நிறைந்துள்ளது. (தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிரிகளிடத்தில் மட்டுமல்ல, சிநேகிதனிடத்திலும் எச்சரிக்கையாக அளந்து பழக வேண்டும்.
~ வாரியார்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## சேராத இடம்தனில் சேர்ந்த கர்ணனுக்கே அக்கதியென்றால்...

வைகுண்டபுரம் என்ற பெயரில் ஒரு திரைப் படம் வெளிவந்திருந்தது.

அந்தத் திரைப்படத்தின் கதைக் கருவூலம் மகாபாரதத்தை அடியொற்றியது என்பது நம் நினைப்பு.

அதிலும் கர்ண பாத்திரத்தைச் செம்மை செய்து அந்தத் திரைப்படம் ஆக்கப்பட்டுள்ளது எனலாம்.

இதில் வால்மீகி என்ற பாத்திரம் திரைப்படத்தில் எதிர்மறையாகக் காட்டப்படுகின்றது.

பொதுவில் இந்து மக்களிடம் வால்மீகி என்ற பெயர் போற்றுதலுக்குரியது.

இராமாயணத்தை எழுதியவர் வால்மீகி என்பதால் அவர் மீது ஏற்பட்ட மரியாதை அவரின் பெயருக்கும் உண்டாயிற்று.

இருந்தும் வைகுண்டபுரம் என்ற திரைப் படத்தில் வால்மீகி என்ற பாத்திரம் வெறுப்புக் குரியதாக இருப்பதுதான் விசித்திரம்.

எனினும் இதற்கெல்லாம் காரணம் தேடவா முடியும் என்பதோடு அந்த விவகாரத்தை நிறுத்திக் கொள்ளலாம்.

ஆனால் வைகுண்டபுரம் என்ற திரைப் படத்தில் வருகின்ற பண்டு என்ற கதாநாயகன் மகாபாரதத்தில் வருகின்ற கர்ணனின் நிலைமையை ஒத்தவன் என்பதைக் கூறிக் கொள்ளலாம்.

ஆனால் ஒரு விடயம்; வைகுண்டபுரத்தில் தன் மகன்தான் பண்டு என்பது பெற்ற தாய்க்கு இறுதிவரைத் தெரியாது.

மகாபாரதத்தில் தன் புதல்வன் கர்ணன் என்பதை இடைக்காலத்திலேனும் குந்திதேவி அறிந்து கொள்கிறார்.

ஆம், கர்ணன் சூரியபகவானுக்கும் குந்தி தேவிக்கும் மகனாகப் பிறந்தவன். வதுவைக்கு முன்பிறந்த ஒரே காரணத்தால் பெற்ற குழந்தையை தாய் குந்தி; பேழையில் வைத்து ஆற்றில்விட, அக்குழந்தையை குதிரைப் பாகனொருவன் எடுத்து வளர்க்கிறான்.

விதி வலிய தன்றோ! கௌரவர் தலைவன் துரியோதனனின் நண்பனாக கர்ணன் ஆகி விட்டான். அதன் விளைவு, கவச குண்டலத்தோடு பிறந்த சூரியப் புதல்வன் குருசேத்திரப் போரில் பரிதாபமாக மரணிக்கின்றான்.

உலகுக்கெல்லாம் ஒளிதரவல்ல சூரியனின் மைந்தனாகப் பிறந்து இராஜமாதா குந்திதேவியின் மூத்த புத்திரனாக அவதரித்து, பெற்றோரின் அரவணைப்பின்றி வளர்ப்புப் பெற்றோர்களின் தயவில் வாழ்ந்து, ஈற்றில் செய்த புண்ணியம் அனைத்தையும் ஈகை செய்து மரணிக்கின்றான்.

வீழ்ந்து கிடக்கின்ற கர்ணனை அவன் தாய் குந்திதேவி அரவணைத்து மகனே! மகனே! என்றழுகிறாள்.

குந்தியின் அழுகையால் கர்ணனுக்கு எந்த பயனும் இல்லை. அப்படியானால், கொடைக்குப் பெயர்போன கர்ணனுக்கு ஏன்? இப்படியொரு அவலம் என்று கேட்டால், சேராத இடம் தனிலே சேர்ந்ததுதான் இத்துணைக்கும் காரணம் எனலாம்.

ஆக, இந்த கதையை அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கும் பங்காளிக் கட்சிகள் கட்டாயம் படிக்க வேண்டும்.

ஏனெனில், ராஜபக்ஷ அரசு எங்களை முற்றாகப் புறக்கணித்து விட்டது எனப் பங்காளிக் கட்சிகள் அழுகின்றனவல்லவா அதற்காகத் தான்.

## கொடிகாமம் இராமாவில் பகுதியில்
## ஆலயத்தில் திருடிய பணத்தில் நகை செய்து அணிந்தவர் கைது

(யாழ்ப்பாணம்)

ஆலயங்களில் திருடிய பணத்தில் ஒரு பகுதியைத் தனக்கு நகை செய்து அணிந்து கொண்ட சந்தேகநபர் யாழ்ப்பாணம் மாவட்டக் குற்றத் தடுப்புப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபரின் உடைமையிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தங்க நகை, ஆலயப் பொருள்களும் கைப்பற்றப்பட்டன எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட இராமாவில் பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றில் கடந்த 21 ஆம் திகதி 4 இலட்சம் ரூபாய் பணம் மற்றும் ஆலயத்திலிருந்த பொருட்களும் திருட்டுப் போயிருந்தன. இதுதொடர்பில் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது.

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட மாவடிப் பிள்ளையார் ஆலயத்தில் கடந்த 22 ஆம் திகதி 20 ஆயிரம் ரூபாய் பணம் திருட்டுப் போயிருந்தது. இதுதொடர்பில் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

விசாரணைகளில் நாவற்குழியைச் சேர்ந்த 34 வயதான ஒருவர் கடந்த செவ்வாய்க்கிழமை கைது செய்யப்பட்டார். அவருடன் சேர்ந்திருந்த ஒருவர் தப்பித்திருந்தார்.

சந்தேகநபர் ஆலயங்களில் திருடிய பணத்தில் 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பெறுமதியான நகையை வாங்கி அணிந்திருந்துள்ளார். அந்த நகை பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

(ம-18,33)

## எரிவாயு வெடித்தல் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படும்
### யாழ். மாவட்ட அரசாங்க அதிபர்

(யாழ்ப்பாணம்)

பாவனையாளர் அதிகார சபையினரால் யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிவாயு அடுப்பு வெடித்தல் இடம்பெற்ற பிரதேசங்களில் உள்ள பொலிஸ் நிலையங்கள் ஊடாக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அந்த அறிக்கையின் ஊடாக அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.

எரிவாயு அடுப்புகள் மற்றும் எரிவாயு சிலிண்டர்கள் வெடிப்பு சம்பவங்கள் தொடர்பாக கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண மாவட்டத்தில் எரிவாயு அடுப்புகள் வெடித்து சிதறிய சம்பவங்கள் இன்று வரை பதிவு செய்யப்பட்டுள்ளன.

நாங்கள் இந்த நிலைமை குறித்து ஆராய்ந்து கடந்தவார இறுதியில் பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் ஊடாக குறித்த நிலைமை தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு கோரியிருந்தோம்.

அவர்கள் விசாரணை மேற்கொண்டபோது பாவனையாளர் பாதுகாப்பு அதிகார சபையின் தலைமைப்பீடம் இந்த விடயங்களை, அதாவது எரிவாயு அடுப்பு வெடித்தல் சம்பவங்களை அப்பிரதேச பொலிஸ் நிலையங்களின் ஊடாக விசாரணை செய்து அதனை சமர்ப்பிக்குமாறு அறிவித்துள்ளார்கள்.

குறிப்பாக இந்த விடயமானது தேசிய மட்டத்தில் இடம்பெற்றுவரும் ஒரு சம்பவமாகும். எனவே இந்த விடயம் தொடர்பில் பாவனையாளர்கள் எச்சரிக்கையாக இந்த விடயத்தை கையாள வேண்டும்.

குறிப்பாக புதிதாக எரிவாயு சிலிண்டர்களை பெற்றவர்களிடமிருந்தே இந்த முறைப்பாடு அதிகம் கிடைக்கப்பெற்றுள்ளது என்றார்.

(ம-33,104)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்தமற்றும் தாழ் அழுத்த மின் விநியோகமார்க்கங்களின்கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை3ஆம்திகதிவெள்ளிக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5 மணி வரை

**வவுனியா பிரதேசத்தில்** குருக்களூர் மன்னார் வீதி, குருக்கள் புதுக்குளம்- மணியர்கும் ஆகிய பிரதேசங்களில் மின்சாரம் தடைப்படும்.

## புலிகளின் தங்கம் தேடிய சம்பவம்
## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் நீக்கம்

(கொழும்பு)

இறுதி யுத்த காலத்தில் புதைக்கப்பட்டதாக கருதப்படும் புலிகளின் தங்கம் தேடிய சம்பவம் தொடர்பில் சரத் வீரசேகரவின் அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளர் பணிநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பொது பாதுகாப்பு அமைச்சின் ஒருங்கிணைப்பு செயலாளர், உடன் அமுலுக்கு வரும் வகையில் பணி இடை நீக்கம் செய்யப்பட்டுள்ளதாக பொது பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## சத்திய தரிசனம்



### செயல்களைப் பொறுத்தே விளைவு


❖ தண்ணீரில் கல்லைப்போடும்போது, அலைகள் தோன்றி நீர்நிலையின் கரை வரையிலும் பரவும். இதுபோல, நம் மனதில் ஓர் எண்ணம் விழுந்தால் அந்த எண்ணம் நல்லதோ, தீயதோ உடல் எங்கும் பரவி விடுகிறது. மனம் என்னும் குளத்தில் உருவாகும் சிந்தனை அலைகள் கைகளை அடைந்து தீய செயல்களைச் செய்கிறது. விழிகளை அடைந்து தீய காட்சிகளைக் காண்கிறது. கால்களை அடைந்து தீய இடங்களுக்குச் செல்கிறது. ஆக, எண்ணங்களுக்கேற்பவே நாம் நல்ல செயல்களையோ கெட்ட செயல்களையோ மேற்கொள்கிறோம். எனவே மனதில் நல்ல எண்ணங்களை வளர்த்துக்கொள்ள வேண் டும்.

❖ ஒருவர் சிறந்த மனிதராக திகழ மூன்று குணங்கள் தேவை. முதலில் நல்லவராக வாழவேண்டுமென்ற உறுதியான, அசையாத நம்பிக்கை வேண்டும். இரண்டாவதாக பொறாமை, வெறுப்பு, கர்வம் ஆகிய குணங்களிலிருந்து விடுபடவேண்டும். மூன்றாவதாக நம்மைச் சுற்றிலும் உள்ளவற்றில் ஓர் அமைப்போ அல்லது தனி நபரோ தொண்டு செய்யும்போது பாராட்டும் உள்ளம் வேண்டும்.

❖ சர்க்கரையை விஷம் என நினைத்து, அதை நீரில் கரைத்து சாப்பிட்டால் தீமை எதுவும் உண்டாகிவிடாது. அதேசமயம் விஷத்தை நீரில் கலந்து, அதை கரும்புச்சாறு என்று நினைத்து குடித்தால் நிச்சயம் ஆபத்துதான் விளையும். எனவே தீய செயலை நல்லதென்று நினைத்து செய்தாலும், விளைவு தீயதாகவே இருக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இலங்கையின் நல்லூர் நாவலர் வீதியிலே திரு. வாமதேவாவின் மகனாகப் பிறந்த உயர்திரு. தியாகேந்திரன் இயல்பாகவே பிறருக்கு உதவும் மனப்பான்மையைத் தன்னகத்தே கொண்டுள்ளதுடன் கடந்த 40 வருடங்களாக பல அறப்பணிகளைப் புரிந்து வருகிறார். இருந்த பொழுதிலும் கடைசி இருபது வருடங்களாக தியாகி அறக்கொடை நிறுவனம் என்றழைக்கப்படுகின்ற சமூக அறக்கொடை நிறுவனமொன்றை ஏற்படுத்தி கடந்த காலத்தில் அவர் செய்த அறப்பணிகளில் சிலவற்றை அவரது 70 ஆவது அகவையை முன்னிட்டு இங்கு அறியத் தருகின்றோம்.**




- மந்திகை ஆதார வைத்தியசாலையின் Physiotherapy•Centre 90 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.
- தெல்லிப்பளை ஆதார வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் ஒரு கோடி ரூபா செலவில் "தியாகேந்திரன் கிளினிக் மையம்" அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது. அத்துடன் புற்றுநோய் சிகிச்சை மையக் கட்டடம் அமைப்பதற்கென பல லட்சம் ரூபாய்கள் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.
- வவுனியா ஆதார வைத்தியசாலைக்கு 35 லட்சம் ரூபா செலவில் குடிநீர் சுத்திகரிக்கும் இயந்திரம் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் அதனைப் பராமரிப்பதற்கும் 15 லட்சம் செலவழிக்கப்பட்டுள்ளது.
- ஜனாதிபதியின் COVID 19 நிவாரண நிதியத்திற்கென இரண்டு கோடி ரூபா அன்பளிப்பு செய்யப்பட்டது. இதற்கு மேலதிகமாக கொரோனா நிவாரணமாக வடக்கு மற்றும் மலையகம் கொழும்பு என நாட்டின் பல பகுதிகளுக்கும் நிவாரணமாக மேலும் ஒரு கோடி ரூபா கொடுக்கப்பட்டது.
- ஸ்தாபகரின் சிந்தனையில் தோற்றம் பெற்றுள்ள நாய்கள் சரணாலயத்தின் உருவாக்கம் மற்றும் பராமரிப்புக்கு இதுவரை 3 கோடி ரூபா செலவழிக்கப்பட்டுள்ளது.
- விவசாயச் சங்கங்களின் வட்டுக்கோட்டை, உப்புவயல் குளம் 20 லட்சம் ரூபா நிதியில் புனரமைத்து விவசாயிகளிடம் கையளிக்கப்பட்டது.
- யாழ். நகரை அழகுபடுத்தும் திட்டத்தின் கீழ் ஆரியகுளம் புனரமைப்புப் பணியானது 3 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீட்டில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- வடமாகாணத்தில் பாதுகாப்பற்ற பொது மக்களின் பல கிணறுகள் பல லட்சம் ரூபா செலவில் புனரமைக்கப்பட்டது.
- TCT Children Home 27 பிள்ளைகளுடன் கடந்த 15 வருடங்களாக இயங்கி வந்ததுடன் அவர்கள் மண வாழ்க்கையில் ஈடுபடும் வரை பராமரிக்கப்பட்டு வந்தனர்.
- பல வயோதிபர்களை வீட்டில் வைத்து பராமரிப்பதற்கு கொடுப்பனவுகள் செய்யப்படுகின்றன.
- வறுமைக் கோட்டிற்கு உட்பட்டவர்களின் சிலமருத்துவத் தேவைகளுக்கும் சத்திர சிகிச்சைகளுக்கும் உதவிகள் வழங்கப்படுகின்றன.
- பொருளாதாரத்தில் நலிவடைந்த குழந்தைகள் இல்லாத தம்பதிகளுக்கு IVF சிகிச்சைக்கு பல லட்சம் ரூபா இதுவரைக்கும் கொடுக்கப்பட்டுள்ளது.
- செவிப்புலன் பாதிக்கப்பட்டு பேச்சாற்றலிலும் குறைபாடுடையவர்களுக்கு பல லட்சம் ரூபா செலவில் Hearing Solutions மூலமாக ஏற்பாடு செய்யப்பட்டுத் தீர்வு காணப்பட்டுள்ளது.
- பார்வைக் குறைபாடுள்ளவர்களுக்கு பல மில்லியன் ரூபா செலவில் மூக்குக் கண்ணாடிகள் வழங்கப்பட்டுள்ளன.
- மருத்துவ தேவைகளுக்காகக் கொழும்புக்குச் செல்லும் நோயாளர்களுக்கு போக்குவரத்துச்செலவுகள் வழங்கப்பட்டுள்ளன.
- கொரோனா தனிமைப்படுத்தும் வைத்தியசாலைகளுக்கு உதவிகள் மற்றும் இரண்டு சலவை இயந்திரங்கள் (Hot Water Plants , Wheel Chair, Trolleys, PCR tubes) போன்றனவும் வழங்கப்பட்டன.
- தியாகி வீடமைப்புத் திட்டத்தினூடாக பொருளாதாரத்தில் நலிவடைந்த 5 குடும்பங்களுக்கு பல மில்லியன் ரூபா செலவில் காணியுடன் வீட்டுத் திட்டம் அமைத்துக் கொடுக்கப்பட்டது.
- சொந்தக்காணி இருந்தும் பொருளாதாரவசதி இல்லாத மூவின மக்களுக்கும் வீடு கட்ட முடியாமலிருந்த 30 குடும்பங்களுக்கும் வீடுகள் கட்டிக் கொடுக்கப்பட்டுள்ளன. அத்துடன் தொழில் முயற்சியில் ஈடுபடுவதற்குக் காணிகளும் வழங்கப்பட்டன.
- முழுமையாக இரண்டு முன்பள்ளிகள் பல லட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளதுடன் பல வருடங்களாக முன்பள்ளி ஆசிரியர்களுக்கான கொடுப்பனவுகளும் வழங்கப்பட்டன.
- கனகரத்தினம் மகா வித்தியாலயத்தின் நூலகம் 7 லட்சம் ரூபா செலவில் புனரமைத்துக் கொடுக்கப்பட்டது.
- St.Patrick's Collegeக்கு சர்வதேச தரத்திலான Tennis Court வடிவமைத்துக் கொடுக்கப்பட்டதுடன் நுழைவாயிலும் அமைத்துக் கொடுக்கப்பட்டது.
- J/Holy Family Conventக்கு Basket Ball Court 6 லட்சம் ரூபா செலவில் அமைத்துக் கொடுக்கப்பட்டது.
- J/Hindu Ladies Collegeக்கு ஏழு லட்சம் ரூபா செலவில் நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்டது.
- J/Vembadi Girls' High School மின்னிணைப்பிற்கு 3 லட்சம்
- St. John Bosco பாடசாலைக்கு பல லட்சம் ரூபா செலவில் Stadium அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளது.
- J/Central College க்குப் பல மில்லியன் ரூபா செலவில் நுழைவாயில் நிர்மாணிக்கப்பட்டது.
- J/St.John's Collegeக்கு Tennis Court மற்றும் Basketball Court நிர்மாணிப்பதற்கு 12 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.
- Mobile Ambulance Service ஐ ஆரம்பிப்பதற்காக மருத்துவ பீடத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட இசை நிகழ்ச்சிக்கு 5 லட்சம் ரூபா வழங்கப்பட்டது.
- அரச சேவையில் பணிபுரிபவர்களுக்கு 5 மில்லியன் ரூபா செலவில் அச்சிடப்பட்ட இரண்டாம் மொழி சிங்களப் புத்தகங்கள் வழங்கப்படுகின்றன.
- தாட்சாயிணி இலவச மருத்துவசேவை கடந்த 15 வருடங்களாக இயங்கி வந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் இலவசப் போக்குவரத்து வசதியுடன் நோயாளிகளுக்கு இதன்போது இலவச மருந்துகளும், இலைக் கஞ்சியும் வழங்கப்பட்டன.
- மகளிர் மீள் எழுச்சித்திட்டத்தின் கீழ் 100 ற்கும் மேற்பட்ட திருமணமாகாத மகளிருக்கு மாதாந்தம் குறிப்பிட்ட தொகை வைப்பிலிடப்பட்டு அவர்களின் திருமணத்தின் போது மொத்தமாக வழங்கப்பட்டன.
- பொருளாதார சுமை காரணமாக பல்வேறு தனியார் மற்றும் நுண்நிதி நிறுவனங்களில் உயர்ந்த வட்டிவீதத்தில் கடன் பெற்றுத் திருப்பிச் செலுத்த முடியாதவர்களுக்காக ஏறக்குறைய ஒரு கோடி ரூபா செலுத்தப்பட்டுள்ளது.
- இன்றைய கொரோனா பெருந் தொற்றுக் காலப்பகுதியில் நல்லூர் உற்சவ காலத்தில் சிறிய வியாபார நடவடிக்கையில் ஈடுபட முடியாமல் இருந்த 90 குடும்பங்களுக்கு இருபதாயிரம் தொடக்கம் ஐம்பதாயிரம் வரையாக மொத்தமாக பத்து லட்ச ரூபாய் நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது. அத்துடன் போக்குவரத்து வசதியின்றி வெளி மாவட்டத்திற்குச் செல்ல முடியாதிருந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு பல லட்சம் ரூபா செலவில் பிரயாண ஏற்பாடுகள் செய்யப்பட்டதுடன் பல மாணவர்களுக்குத் தங்கியிருந்து படிப்பதற்கான வாடகைப் பணமும் கொடுக்கப்பட்டது.
- சுயதொழில் செய்வதற்கு ஆர்வம் உள்ளவர்களுக்கு நிதி உதவி செய்ததுடன் அதனைச் சந்தைப்படுத்துவதற்கு தனது வியாபார ஸ்தலத்தில் வாய்ப்பும் வழங்கியுள்ளார்.
- முல்லைத்தீவு நாயாற்று பகுதியில் தீயிட்டு எரிக்கப்பட்ட மீனவர்களின் வாடிகள் மீள நிர்மாணித்துக் கொடுக்கப்பட்டுள்ளன.
- சுயதொழில் முயற்சிக்காக நூற்றுக்கணக்கான தையல் இயந்திரங்களும் பாடசாலை மாணவர்களுக்கு துவிசக்கரவண்டிகளும் வழங்கப்பட்டுள்ளன.
- மாற்றுத்திறனாளிகளுக்கு 50 இற்கு மேற்பட்டசக்கர நாற்காலிகள் வழங்கப்பட்டுள்ளன
- முன்னாள் மறைந்த அமைச்சர் பெ.சந்திரசேகரன் அவர்களின் வேண்டுகோளிற்கு அமைய 500 மாணவர்களுக்கு மாதாந்த உதவிகள் பல வருடங்களாக வழங்கப்பட்டு வருகின்றன.
- அமைச்சர் காமினி லொக்குகே அவர்களின் வேண்டுகோளிற்கு இணங்க பொருளாதாரத்தில் நலிவடைந்த மக்களுக்கு பல லட்சம் ரூபாய்கள் மாதாந்த உதவித்தொகையாக வழங்கப்பட்டுள்ளன.
- அகில இலங்கை ரீதியாக மூவினமக்களையும் சேர்ந்த இருபதாயிரத்திற்கு மேற்பட்ட பயனாளிகள் எமது மாதாந்த உதவித் திட்டத்தில் பயனடைந்து வந்துள்ளனர். இதற்காக மாதாந்தம் இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருந்தது. தென்னிந்தியாவிலும் பல உதவித் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.
- வேலைவாய்ப்பை உருவாக்கும் நோக்குடன் எமது வியாபார ஸ்தாபனத்தில் 150 ஊழியர்கள் உள்வாங்கப்பட்டுள்ளனர்.
- கலைஞர்களுக்கு அவர்களின் வாழ்க்கையை முன்னேற்றும் முகமாக பல லட்சம் ரூபாய்கள் கொடுக்கப்பட்டன. வீட்டுத்திட்டத்தில்கலைஞர் ஒருவரும் உள்வாங்கப்பட்டுள்ளார்.
- எமது வட்டார வீதிகளை தூய்மைப்படுத்துவதற்கு ஒரு மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளார்.
- யாழ்.நகர விளையாட்டுப்போட்டிகளை (tournament - matches) ஊக்கப்படுத்தும் நோக்குடன் மில்லியன் ரூபாய்களை வழங்கியுள்ளார்.

**தியாகி அறக்கொடை நிறுவனம்**

(C-3141)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இளம் குடும்...

அடித்து படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் சம்புக்குளம் பகுதியில் நேற்று முன்தினம் மாலை 4.30 மணியளவில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

நண்பர்கள் இருவருக்கிடையில் ஏற்பட்ட வாக்குவாதம் முற்றிய நிலையில் குறித்த நபர் தடியால் தாக்கப்பட்டு படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டு பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் நேற்று உயிரிழந்துள்ளார்.

இதில் அதே இடத்தைச் சேர்ந்த இராமையா இராமஜெயம் எனும் ஒரு பிள்ளையின் தந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக தருமபுரம் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ம-316)

## வலி. வடக்கு...

ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த சுப்பிரமணியம் சிவபாலன் என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆவரங்கால் பகுதியைச் சேர்ந்த குறித்த நபர் தனங்கிளப்புப் பகுதியில் தென்னந்தோட்டம் ஒன்றினை பராமரித்து வருவதுடன் தோட்டத்துடன் இணைந்த வீட்டில் வசித்து வந்துள்ளார்.

கடந்த சில தினங்களாக அவரின் நடமாட்டத்தை அயலவர்கள் அவதானிக்காத நிலையில் நேற்றையதினம் வீட்டிலிருந்து துர்நாற்றம் வீசியதையடுத்து வீட்டுக்குள் சென்று பார்த்தபோது அவர் உயிரிழந்த நிலையில் சடலமாக காணப்பட்டார். (ம-18,30,33)

## அராலியில்...

திகதி ஒரு வீட்டிலும் 29ஆம் திகதி மற்றைய வீட்டிலும் வெடித்துச் சிதறியுள்ளன.

இது தொடர்பாக வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையத்தில் ஒரு வீட்டினரால் நேற்று முறைப்பாடு பதிவு செய்யப்பட்ட நிலையில் வட்டுக்கோட்டை பொலிஸாரின் இரண்டு குழுக்கள் குறித்த வீட்டிற்கு சென்று அடுப்பினை பார்வையிட்டு சென்றுள்ளனர்.

சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போதே எரிவாயு அடுப்பு இவ்வாறு வெடித்துச் சிதறியதாகவும் எனினும் எவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் சம்பவம் நிகழ்ந்த வீட்டு உரிமையாளர்கள் தெரிவித்தனர்.

மேலும் சுன்னாகம் கந்தரோடை மற்றும் யாழ். நகருக்குள் 1 ஆம் குறுக்குத் தெருப் பகுதியிலும் சிலிண்டர் வெடிப்புச் சம்பவம் பதிவாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-18,33,104)

## கிளிநொச்சி...

டரை பயன்படுத்த முயற்சித்தபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. (ம)

## 26 பேர்...

பலியாகியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கோவிட் மரணங்களின் மொத்த எண்ணிக்கை 14,372 ஆக அதிகரித்துள்ளது. (ம)

## "எமது நிலத்தை...

கள் உட்பட பலரும் கலந்துகொண்டு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

நிலத்தைப் பறிப்பதும் எம் உயிரைப் பறிப்பதும் ஒன்றே, எமது நிலம் எமக்கு வேண்டும், காணிகளை சுவீகரிக்காதே, ஆளுநரே காணி அபகரிப்புக்கு உடந்தையாகாதே போன்ற பல்வேறு கோஷங்கள் போராட்டக்காரர்களால் எழுப்பப்பட்டன.

போராட்டம் இடம்பெற்ற அப்பகுதியில் பொலிஸாரும், இராணுவத்தினரும், புலனாய்வுப் பிரிவினரும் கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ம-18,33)

## தீர்வு காண...

என்பது தமிழ் மக்களுக்கு காணப்படுகின்றது. சில பேருக்கு 20 வருடங்கள் சில பேருக்கு 30 வருடங்கள் சிலர் தமது காணியினை இன்று வரை தெரியாதவர்களும் உள்ளார்கள்

அவர்களுக்கு தமது காணி எங்கு உள்ளது என்பது தெரியாது. அவ்வாறான பிரச்சினைகளுக்கு ஒரு தீர்வு காண வேண்டும். அவ்வாறான பிரச்சினையை தீர்ப்பதற்கு ஒரு படிமுறை உள்ளது.

அதன்படி தற்போது புதிய சில வழிமுறைகளும் வந்துள்ளன. இவ்வாறான காணிப் பிரச்சினை விடயம் 30 ஆயிரத்துக்கும் மேல் இருந்தன. எனினும் தற்போது மூவாயிரமாக குறைந்துள்ளன.

எனவே ஏனைய தீர்க்கப்பட வேண்டிய விடயங்களுக்கு ஒரு நடைமுறையை பின்பற்ற வேண்டும். குறிப்பாக காணி பற்றி நாங்கள் பேசும்போது மிகவும் மனவேதனையாக உள்ளது. சிலர் கூறுவார்கள் தனது தாய் தந்தையர் வழங்கிய காணி என சிலர் உற்றார் உறவினர்கள் வழங்கிய காணி என்பார்கள். எனவே இதற்கு ஒரு முடிவினை எடுத்து இந்த காணிப் பிரச்சினைக்கு ஒரு தீர்வு கொடுக்க வேண்டும்.

பொதுமக்களின் காணிகளை சட்ட திட்டங்களை மீறி கையகப்படுத்த முடியாது. தற்பொழுது சிலர் அறிக்கையிட்டுள்ளார்கள். ஏதோ கூட்டம் வைக்கிறாராம் காணியை வேறொருவருக்கு வழங்கப் போகிறார் என, நான் அவ்வாறு கூறவில்லை.

நான் சந்திக்கப் போவது என்ன விடயம் என்றே கூறவில்லை. எனவே நான் கூறாத ஒரு விடயத்தினை அறிக்கையிட்டுள்ளார்கள். அதாவது நான் ஆளுநர் பதவியில் உள்ள ஒருவன் சட்டத்தின் படியே சட்டத்தின் படிமுறையின்படியே காணி பிரச்சினையை தீர்த்து வைக்க முடியும்.

எனவே சட்டத்தை மீறி என்னால் ஒன்றும் செய்ய முடியாது. எனவே ஒரு பிரச்சினையை தீர்த்து வைக்க வேண்டுமாக இருந்தால் நான் சட்டத்தின்படியே செல்ல வேண்டும் எனவும் தெரிவித்தார். (ம-18,33)

## பொருளாதார...

தெரிவித்தார்.

இதேவேளை, நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க உள்ளதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நிதி அமைச்சராக பதவியேற்றதன் பின்னர், அவர் மேற்கொள்ளும் முதலாவது உத்தியோக பூர்வ வெளிநாட்டு விஜயம் இதுவாகும். (ம)

## கொரோ...

ரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தில் ஒக்டோபர் மாதத்தில் 2 ஆயிரத்து 661 பேர் கொரோனா நோய்த் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். எனினும், நவம்பர் மாதத்தில் 3 ஆயிரத்து 49 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நவம்பர் மாதத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் அதிகப்படியாக 842 பேர் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அடுத்தபடியாக யாழ்.மாவட்டத்தில் 825 பேர் தொற்றாளர்களாக இனம் காணப்பட்டுள்ளனர். (ம-18.33)

## தலை...

பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ரி.வினோதன் தெரிவித்தார்.

தலைமன்னார் வைத்தியசாலையில் பாடசாலை மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் உள்ளடங்கலாக 50 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன.

இதன்போது தலைமன்னார் துறை அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் 12 பேருக்கும் பெற்றோர்கள் 3 பேர் உள்ளடங்கலாக 15 பேருக்கு கொரோனா தொற்று உள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளன. (ம-285)

## "ஒமிக்ரோன்...

வைரஸ் பிறழ்வு இலங்கைக்குள் வரவில்லை என எவராலும் கூறமுடியாது என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

"ஒமிக்ரோன்" வைரஸ் பிறழ்வு இலங்கைக்குள் நுழைந்துவிட்டதா என்பது தொடர்பில் கருத்து தெரிவிக்கும்போதே இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

ஒமிக்ரோன் தொடர்பில் உறுதியாக எதையும் கூற முடியாது. சரியான தகவல்கள் எமக்கு இதுவரை கிடைக்கவில்லை.

எனினும், உலகின் ஏனைய நாடுகளுக்கு பரவியுள்ள விதத்தை பார்க்கும் போது நமது நாட்டிற்கு குறித்த பிறழ்வு வரவில்லை என எவராலும் கூற முடியாது என்றார். (ம)

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 01/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 1174
வெற்றி இலக்கங்கள்
மகரம் 2 2 8 1 0 6
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 01/12/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0951
V 13 39 64 73 76

மஹஜன சம்பத
திகதி 2021/12/01
சீட்டிழுப்பு இலக்கம் 4603
T 6 2 3 1 0 5
தேசிய லொத்தர் சபை

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 01.12.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2898
E 04 33 39 54

தன நிதானய
திகதி -2021.12.01
சீட்டிழுப்பு இலக்கம் - 633
Q 60 61 74 78

அத கோடிபதி
கிழமை புதன்கிழமை
சீட்டிழுப்பு இல 1406
வர்ணம் இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி 01.12.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 4,397,440
வெற்றி இலக்கங்கள் 28 29 58 62 L

சனிதா
கிழமை புதன்கிழமை
சீட்டிழுப்பு இல 0741
வர்ணம் நீலம்
சீட்டிழுப்பு திகதி 01.12.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 3,977,880
வெற்றி இலக்கங்கள் 26 28 34 73 C

சசிரி
சீட்டிழுப்பு வாரம் 106
சீட்டிழுப்பு திகதி 01.12.2021
புதன்கிழமை
வெற்றி இலக்கங்கள் 35 37 44
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 1,435,740/-

சுப்பர் ஜக்பொட் ரூ. 2,374,707/=
திகதி 01.12.2021
வெற்றி வாரம் 3292
வர்ணம் பச்சை
வெற்றி இலக்கங்கள் 29 37 44 51 மகரம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 9,180,300/=

ஜயோதா
சீட்டிழுப்பு வாரம் 1790
சீட்டிழுப்பு திகதி 01.12.2021
வெற்றி இலக்கங்கள் 24 37 55 60 C
எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 28,493,900/-
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1580
சீட்டிழுப்பு திகதி 01.12.2021
நிறம் செம்மஞ்சள்
தினம் புதன்
Z 17 30 48 68
அடுத்த சுப்பர் ஜக்பொட் :- 72,634,950/=

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேலை வாய்ப்பு

- வரவேற்பாளர் - பெண்
- மணவறை அலங்கார வடிவமைப்பாளர் - பெண்

முன்அனுபவம் தேவையில்லை. (8863)

தொடர்புகளுக்கு:-

**077 777 1723**

யாழ்ப்பாணம்

## விற்பனைக்கு

ஆனைக்கோட்டை மூத்த நயினார் ஆலயத்திற்கு அருகாமையில் 11/4 பரப்பு காணி, கிணறு, 18 தென்னை மரத்துடன் விற்பனைக்கு உண்டு. (8854)

**077 364 6608**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**

**UK-975/=Kg**

எமது நேரடிக்கிளைகள்

- யாழ்ப்பாணம்
- நெல்லியடி
- புதுக்குடியிருப்பு
- பருத்தித்துறை
- புத்தூர்
- கொடிகாமம்
- சுன்னாகம்
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- மானிப்பாய்
- கிளிநொச்சி
- சாவகச்சேரி

(C-3132)

**0768226240** DHL

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் (C-3133)

**V2 TRAVELS**

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, திருகோணமலை, கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
**சம்பளம் - 15'000/-**
பயிற்சியின்போது - 10'000/-

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

0777-068-777
v2vacancies@gmail.com

---

வங்கியில் அடகு வைத்த நகைகளை மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (8866)

**076 825 7716** (ஆகாஸ்)

## உடனடி வேலை வாய்ப்பு

உரும்பிராயில் அமைந்துள்ள Super Market ஒன்றுக்கு கீழுள்ள வேலைக்கு ஆட்கள் தேவை.

Cashier (ஆண்கள்), bulk வேலை (பெண்கள்), accounts assistant (பெண்கள்) வயதெல்லை: 19-26

வேலைக்கேற்ற சம்பளம் வழங்கப்படும். (8870)

தொடர்புகளுக்கு:- **077 350 4700**

## அறிவித்தல்

இல. 4 மானிப்பாய் வீதி, மருதனார்மடத்தில் அமைந்துள்ள VS Electronics இல் திருத்த வேலைக்காக தரப்பட்டு இன்றுவரை மீட்கப்படாத சகல இலத்திரனியல் உபகரணங்களையும் 20.12.2021 இற்குள் மீளப்பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தவறும் பட்சத்தில் நிர்வாகம் பொறுப்பேற்காது என்பதை வாடிக்கையாளர்களுக்கு அன்புடன் அறியத்தருகின்றோம்.

தொடர்புகளுக்கு (8860)

**077 576 1600**
**075 910 0786**

---

## சேவைநலன் பாராட்டு விழாவும் பிறந்தநாள் வாழ்த்துக்களும்



செல்வி கந்தசாமி விஜயகுமாரி
(முகாமைத்துவ உதவியாளர் - II)

அவர்களின் சேவையைப் பாராட்டி வாழ்த்துவதுடன் ஓய்வுகாலத்தில் மகிழ்வுடன் வாழ வாழ்த்துகின்றோம்.

சேவை விபரம்

1. வலயக்கல்வி அலுவலகம், துணுக்காய் 27.08.1999 - 26.08.2015
2. வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி 27.08.2015 - இன்றுவரை

வாழ்த்துவோர்: ஊழியர் நலன்புரிச் சங்கம், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி. (C-3143)

## வேலை வாய்ப்புக்கள்

- சிற்றூழியர்கள் (பெண்கள்) – O/L தகைமையுள்ளோர்
- ஆலோசகர் (ஆண்கள்/பெண்கள்) – சிங்களம் சரளமாக பேச, எழுதக் கூடியவர்கள்
- நிர்வாக உதவியாளர்கள் (பெண்கள்) – O/L, A/L தகைமையுடையோர்

மேற்படி பதவிகளுக்கு விண்ணப்பிக்க விரும்புவோர் முன் பதிவு செய்து 03.12.2021 - 06.12.2021 வரை நேரில் வரவும்.

முன்பதிவு செய்ய - **071 071 6979** (8864)

**WINSTAR CONSULTANTS (pvt) LTD**
**No.45, Vembadi Street, Jaffna.**

---

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 - 12 - 1957



மறைவு 30 - 11 - 2021

### திருமதி தங்கராசா லட்சுமிபிரபா (வேவி)

*1ஆம் குறுக்குத்தெரு இணுவில் வீதி, மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட தங்கராசா லட்சுமிபிரபா அவர்கள் நேற்று முன்தினம் (30.11.2021) அதிகாலை 5 மணியளவில் காலமாகிவிட்டார்.*

*அன்னார் காலஞ்சென்ற தங்கராசா அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லத்துரை - பூமணி தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான வல்லிபுரம் - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் பபிதரனின் (பபி - கட்டார்) அன்புத் தாயாரும் சிவாஞ்சலியின் அன்பு மாமியாரும் நிவின்தேவினின் அன்பு அப்பம்மாவும் செல்லத்துரை ரவீந்திரன், தேவா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சின்னம்மாவின் அன்பு மைத்துனியும் ராஜி, சைலா, வாணி, உமா, காந்தன், ராஜா ஆகியோரின் அன்பு மாமியும் சுரேந்திரா, சுதன், சுதாகர், ஜெனி, குமார், ஜெசி, தீபா, சிறி, வரதன் ஆகியோரின் அன்புச் சித்தியும் லக்சி, நிலக்ஷி, ஆர்த்தி, கிருஷாந், கிமேஷ், ஆதி, ஆகாஷ், மகிசா, பபிசன், துஸ்வின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.12.2021) வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**1ஆம் குறுக்குத் தெரு,**
**இணுவில் வீதி, மானிப்பாய்.** (8847)

*தகவல்:* **மகன் பபிதரன் (பபி)**
**077 264 6363**

---

## மரண அறிவித்தல்

### பொன்னுத்துரை கணேசன்



*முல்லைப்பிளவு காரை நகரை பிறப்பிடமாகவும் உடுவிலை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை கணேசன் கடந்த 29.11.2021 திங்கட்கிழமை காலமானார்.*

*அன்னார் காலஞ்சென்ற பொன்னுத்துரை (நொச்சிப்பூ) - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகனும் றஞ்சினி, குமுதினி ஆகியோரின் அன்புக் கணவரும் வரன் (சுவிஸ்), கிஸ்ணகுமார், கிஸ்ணசாந்தன் (கனடா), கிஸ்ணநேசன், கிஸ்ணரதி, கிஸ்ணவதனி ஆகியோரின் அன்புத் தந்தையும் இரத்தினம் (கனடா), நடராஜா (கனடா), காலஞ்சென்ற கந்தசாமி (கனடா), அம்மணி (கனடா), தேவி (ஜேர்மனி), தவம் (சுவிஸ்), காலஞ்சென்ற ஆறுமுகம் ஆகியோரின் பாசமிகு சகோதரரும் காலஞ்சென்ற பவசிங்கம் (கனடா), தேவராஜா (கனடா), நாகம்மா (கனடா), பாலசிங்கம் (ஜேர்மனி), விவேகானந்தம் (சுவிஸ்), சாந்தகுமாரி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.*

*அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (02.12.2021) வியாழக் கிழமை காலை 9 மணியளவில் உடுவிலில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக காரைநகர் சாம்பல்ஒடை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.*

*இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.*

**பிரதேச செயலக வீதி,**
**உடுவில்.** (8869)

*தகவல்:* **குடும்பத்தினர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் [illegible] முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.12.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.